,892M 4P
NCS
119162I

உ

கடவுள் துணை.

மதுரைமாநகரம், ம-ள-ள-ஸ்ரீ,

சுந்தர ஜெய வீர சூர தீர கவிராஜ

கந்தசாமிபிள்ளை யவர்களால்

இயற்றப்பட்ட.

பதிவிரதை யென்னும்

லலிதாங்கி சரித்திரம்.

இஃது,

சென்னை, குன்னா.

கு-நாதமுனிமுதலியாரவர்களது

ஜையநாயகியம்மன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை.] [அணா 4.

ரிஜிஸ்டர் காபிரைட்.

1905.

O-,892MK54,P
N05

11916 இ

894.8112
1746

கடவுள் துணை.

மதுரைமாநகரம். ம-ா-ா-ஸ்ரீ,

சுந்தரஜெயவீரசூரதீரகவிராஜ

கந்தசாமிபிள்ளை யவர்களால்

இயற்றப்பட்ட.

பதிவிரதை யென்னும்

லலிதாங்கி சரித்திரம்.

REGISTERED 3 FEB 1905 MADRAS

894.8112
1746

இஃது,

சென்னை, சூளை.

கு - நாதமுனிமுதலியாரவர்களது

தையநாயகியம்மன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை.] [அணா. 4

1905.

ரிஜிஸ்டர்காப்பிரைட்டின்

அறிவிப்பு.

இதனால் சகலமான ஜனங்களுக்குந் தெரியப்படுத்துவதென்னவெனில், இந்த பதிவிரதையென்னும் லலிதாங்கியின் சரித்திரத்தை மதுரையாசாரம் சுந்தர ஜெயவீர ருத்திர கவிராஜ கந்தசாமி பிள்ளை அவர்களாலியற்றப்பட்டு யானுமிய ரு. நாதமுனி முதலியாரவர்களால் [illegible] சகலசுதந்திரத்துடன் [illegible] கனம்பொருந்திய கெவர்ன்மெண்டாரவர்களது [illegible] 25-வது ஆக்டு 20-வது செக்ஷன் 8-வது ரூல்சின்படிக்கு ரிஜிஸ்டர்காப்பிரைட் செய்யப்பட்டிருக்கிறபடியால் என்னுடைய உத்திரவின்றி இந்நூலை எவர்களும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு.

ரு. நாதமுனி முதலியார்.

கணபதிதுணை.

விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் சென்னை சூளை கோனத்தெருவென்று வழங்கும் காளத்தியப்பமுதலி வீதி 10-வது நெம்பர் வீட்டில் ஸ்தாபித்திருக்கும் தையல்நாயகியம்மன் அச்சுக்கூடத்தில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், [illegible] முதலிய புத்தகங்களும், காலேஜிப்புத்தகங்களும், ஸ்கூல் புத்தகங்களும், சித்தர்கள்பாடிய சோதிட வைத்தியபுத்தகங்களும், இலக்கணஇலக்கியமுதலாகிய சில்லரைத்திரட்டுப்புத்தகங்களும் விற்பனைக்குத்தயாராயிருக்கின்றபடியால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எமதுமேல்விலாசத்திற்கு எழுதி வி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம். மேலும் 10-ரூபாய்க்குமேற்படுமாகில் பாதிபணம் முன்னுதாயனுப்பவேண்டும்.

பதிவிரதை யென்னும்

லலிதாங்கிசரித்திரம்.

கணபதி-காப்பு.

வெண்பா.

சீருரும்ஞானச் செழுஞ்சுடரே ஜோதியெனும்
பேரார்திருவுருவே பேசப்புகழ்-காரரும்
தந்திமுகானந்தா தற்பரவிக்னேஸ்வரனே
எந்தனுக் கருள்புரிகுவையே.

விநாயகர்-கீர்த்தனை.

சுந்தர கணநாதா ஓம்
சுமுகாயா ஓம் ஜோதிப்ரகாசா. (சுந்தர)
சந்தத முந்தனை சிந்தனை செய்திடும்
மைந்தர்கட் கருள்புரி மகிழ்ப்ரணவமூலா. (சுந்தர)
மூஷிகவாஹன மோதகஹஸ்த
தோஷவிவாரண பாஷாங்குஷதர. (சுந்தர)

சரஸ்வதி—கீர்த்தனை.

வரமருள்வாணி மலரயன்ராணி
வானவர் முனிவர் புகழ்ந் தேற்றும்பூரணி. (வர)
சரஸ்வதியம்மா தற்காத்தருள்வாய்
சகலகலாவல்லியே சாஸ்திரரஞ்சனி. (வர)
ககனதேவர்கள் புகழும்பூரணி
கமலநயனி சிறுவர்மீது கருணைசெய்குவாய். (வர)
புத்தகபாணி புகழ்பாராயணி
பூசுரர்பணியும்வேணி புனிதகல்யாணி (வர)

சந்ததமுன்னை சிந்தனைசெய்யும்
கந்தசாமிக்கருள்தயாள கருணாநிதியே. (௧௫)

லலிதாங்கி சகிகளுடன்

அரண்மனையில் கொலு விருப்பது.

லலிதாங்கி-சொல்வது.

விருத்தம்.

சிருஷ்டிகர்த்தனான சிவபோகைலைவாழ்வே
யாருநம்பிரமக்ஷேத்ர பதியிசைவிளங்கும்தேவே

பேருறுமெனது செங்கோல் பெருமையாய்நிலைக்கச்செய்து
காருமென்றுனைப்பணிந்தேன் கர்த்தனே போற்றிபோற்றி.

சகி-சொல்வது.

விருத்தம்.

அலைகடற்சூழுமிந்த அவனியைப்பரிபாலித்த
கலைவளர்திங்கள்போன்ற கருணைசேர்வடிவேநாளும்
நிலைபெறசத்யமான நீதியிற்சிறந்தஉத்தன்
மலரடிதனையென்றெண்ணி மனதினில்துதித்தோமம்மா.

தேசவிசாரணை-தரு.

லலிதாங்கி.

சீரிலகுமாதரும் மாரிகுறைவின்றி
செழிப்புடன் பெய்கின்றதா
பாரினிற்குறைவின்றி தானதர்மங்களும்
பண்புடன் நடக்கின்றதா.

சகி-தரு.

மாதமும்மாரிபொழிந்துவேளாண்மை
மாட்சியுடன்விளைந்து
ஆதுலர்க்கொருகுறை யின்றியேதர்மம்
அன்புடன் நடக்கின்றதே.

லலிதாங்கி-தரு.

வேதியாளுதினம் யாதொருகுறையின்றி
வேள்விகள் செய்கிறாரா
நீதியாயனைவரும் ஆலயப்பூஜைகள்
நீடுநடத்துறாரா.

சகி-தரு.

அந்தணர்யாதொரு குறையின்றியாகம்
அன்புடன் நடத்துகிறார்
சந்திரசேகரன் விஷ்ணுபூஜைகளும்
சந்ததம் நடக்கின்றதே.

சகி-வசனம்.

அம்மணி! நமது சித்திர க்ஷேத்திரப்பதியில் சதாகாலமும் பக்தியிற்சிறந்த அன்பர்கள் தேவாலயபூஜைகள் சந்ததமுஞ்செய்துகொண்டு சந்திரசேகரனாகிய பரமேஸ்வரன் கிருபையால், யாதொருகுறைவுமின்றி தானதர்மபரோபகாரம் புரிந்துசுகஜீவியாய் வறுமைநோயின்றி தனவந்தராய் விளங்குகின்றனர். அன்றியும், வருணபகவான் கிருபையால்நமது சித்திரக்ஷேத்திரப்பதி செழிப்புற்றிலகும்படியாய்மாதமும்மாரிபொழிந்து நெல், கோதுமை, வரகு, சோளம், கம்பு, தினை, சாமை, துவரை, உளுந்துமுதலாகிய பற்பலவித தானியங்களும் யாதொருகுறைவின்றி விளைந்து செழித்திருக்கின்றது. இனிநமது நகரவாசிகளுக்கு யாதொருகுறைவும் இல்லையம்மா.

லலிதாங்கி-வசனம்.

மெத்த சந்தோஷம், யாவும் சிவன்செயலன்றி மனச்செயலன்று ஆயினும், என்மனதிலோர்வித தீராத்துயர் மிகுந்திருக்கின்றது உமக்குச் சொல்வதற்கும் நாணமாயிருக்கின்றது, ஆனாலும், சொல்லாதிருக்கவும்முடியாது, அன்றியும், உலகத்தை பரிபாலனஞ்செய்யும் இராஜஸ்திரீகளுக்குத் தோழிப்பெண்கள்தான் பெற்றதாய்க்குச் சமானமென்று, கற்றுணர்ந்த கவிஞர்களும் மொழிகின்றனர் ஆகையால், யான் உன்னிடம் சொல்வதற்கு யோசிக்கின்றேன்.

சகி-வசனம்.

அம்மணி அதென்னசங்கதியோ என்முன் விபரமாய்ப்புகல் விரைவில்யான் அதனைநிறைவேற்றி உன்னைமகிழச்செய்வேன்.

லலிதாங்கி-வசனம்.

அப்படியானால் தெரிவிக்கின்றேன் கவனிப்பாய்.

சகி-வசனம்.

சந்தோஷமாய்ப் புகல்வீரம்மா.

லலிதாங்கி-தரு.

இராகம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

அன்னையைப்போன்றவென் சகியேயென் குறைதன்னை
அன்பாய்ப்புகல்வேன்கேளாய். (அன்னை

அநுபல்லவி.

கன்னிகையாகநான் காசினியையாண்டு
இன்னிலந்தன்னிலே இருப்பதாற்பலனென்ன. (அன்னை)

சரணங்கள்.

திருமணமின்றியான் திகைத்துமனமெலிந்து
இக்கற்றபாவிபோல் தீராத்துயருற்று
கருமவினையாலென் கன்னிகழியாமல்
காலங்கழிப்பதற்கு கர்த்தன்விதித்தனனோ (அன்னை)
காரில்லாமலரானேன் நதியில்லாவயலானேன்
நகரவாசிகளில்லா ஞாலத்தைப்போலானேன்
தரணியில்யானொரு ஸ்திரீயாய்ப்பிறந்தேனே
தற்பரன்செய்தானோ யானென்றுமறியேனே. (அன்னை)
வாலவயதினி வருமோவென்தனக்கு
வயதுமுதிர்ந்தபின் மணஞ்செய்துகொள்வேனோ
சீலகுணமிலகும் சித்திரவிழியாளே
சிந்தித்துரைப்பாயென் சித்தமகிழவே. (அன்னை)

லலிதாங்கி-வசனம்.

சகி! எனதுமனவருத்தத்தைச் சொன்னால் மண்ணும்மரமும் கண்ணீர்த்ததும்பக் கதறியழும் ஆ! ஹா! பிரம்மதேவன் என்னையும் ஒருபெண்ணாய் சிருஷ்டித்தனனன்றோ? சகி! உலகிற்பிறந்த ஸ்திரீகட்கு சுகம்யாதென்னிலே தமது வாலவயதினிற்றானே அழகானந்த முகவசீகரதேஜஸமைந்த ஓர்புருஷனைத் திருமணம்புரிந்துபெருமையாய்வாழ்ந்து தமது சந்ததிபெருக மைந்தரைப்பெற்றுமனோல்லாசமாயிருப்பதன்றோ. ஸ்திரீகட்கழகு, அங்ஙனமின்றி பாலசந்திரோதயம் போன்ற இந்த இளம்பருவத்தைவீணாய்க்கழித்துவிட்டால் இனிநாளுக்குநாள் தேகமிளைத்து முதுமைவாய்ந்து விர்த்தாப்பியமென்னும் கிழத்தனமாய்விட்டால்யான் பெண்ணாய் பிறந்ததற்கு யாதுசுகம், இதைவிட இறப்பதுநலமன்றோ? அன்றியும் எனது தாய்தந்தையிருந்தால் என் மனதிற் கிசைந்தநாயகனைத்தேடி எனக்குத் திருமணம் புரிகுவர் இத்தருணம்யான் ஆதரவின்றிய பாவியாயிருப்பதினாலெனக்குயார்துணையிருக்கின்றார் எனவே சந்ததமும் சிந்தைமெலிந்து சந்திரசேகரனை மனதிற் பூசித்துக்கொண்டு கைலாசகிரிவாசா! கௌரிநாயகா!

எனக்கு என்றைக்குக் கலியாணமாகுமென் றுமனவிசாரமாயிருக்கின்றேன்.

சகி-தரு.

அன்பர்கள் மேவிய அருணே (யென்றவர்ணமெட்டு.)

கண்ணிகள்.

அரசிகேளிதற்காக அஞ்சவேண்டாமம்மா
தரணியி லுனக்கொரு தகுந்தமணாளனுண்டு
நின்தந்தைதானவையில் கிருபனுய்விளங்கிய
அன்பானராஜன் அழகேசன்தன்னையே
திருமணமுனக்கன்பாய் சீருடன்செய்விக்க
பெருமையதாகவே பேசியிருந்தார்
ஆகையினாலே அன்பாகயான்சென்று
தோகையேயுன்சேதி சொல்லுகிறேனவர்க்கு
மனதிற்றயராமல் மகிழ்வுடனெந்தனை
அனுப்புவீரம்மா அன்னநடையாளே.

சகி-வசனம்,

அம்மணி ! நீர் இதற்காக விசனப்படவேண்டாம் உமது தந்தை இராஜரீகம் புரியுந்தருணம், அளகாபுரியின் இராஜகுமாரனாகிய அழகேசன் ஓர்கால் இங்ஙனம் வந்திருந்தார் அத்தருணம்உனது தந்தை அவருடைய அழகானதேஜஸைமந்த முகவசீகரத்தைக்கண்ணுற்று, மனமகிழ்ந்து, இந்த அழகேசனுக்குத்தான் என் அருந்தவப்புத்திரியாகிய லலிதாங்கியைத் திருமணஞ்செய்துவைத்து மனமகிழவேண்டுமென ஆலோசித்திருந்தனர், ஆகையால், யானேசென்று அவரிடம் உனதுமனதின் கருத்தைப்புகன்று உம்மிருவருக்கும் திருமணம்புரிவிக்கிறேன் அஞ்சவேண்டாமம்மா.

லலிதாங்கி-வசனம்.

சகி ! நீ சொல்லும்போதே என்மனம்மிகவும் சந்தோஷமாயிருக்கின்றது, ஆயினும், நீ அவனைக்கண்டாய் பார்த்திருக்கின்றாயல்லவா ? ஆகையால் அவருடைய ரூபசௌந்தரிய மெவ்விதமாயிருக்குமோ யான்கவனித்துணர்க விபரம் விபரமாய்ப்புகல்வாய்.

(சகி-தரு.) அன்னையே சொல்வேன் என்றமெட்டு.

பல்லவி.

அம்மணிசொல்வேன் கேளாய்-அந்த
அழகேசன்திருமேனி சுந்தரத்தையுனக்கு (அம்மணி)

அநுபல்லவி.

இம்மாநிலந்தனில் இணையிலாகெம்பீரன்
செம்மையாய்பகைஞரை ஜெயித்திடும்வீரன். (அம்மணி)

சரணங்கள்.

சந்திரோதயம் போன்ற
சுந்தரவதனமும்
செந்தாமரைப்போன்ற
சிவந்தவிழிகளும்
அந்தரந்தனில்வாழும்
கந்தர்வஸ்திரீகளும்
வந்துகாண்பாராகில்
சந்ததமும்பிரியார் (அம்மணி)
வில்லைப்போன்றபுருவம்
பல்வரிசைகளோ
முல்லையரும்பென்னலாம்
தொல்லுலகத்திலிவர்
சொல்லோமதுரமொழி
நல்லோர்கட்கினியவன்
மெல்லியுனக்கிசைந்த
நல்லமணாளனவன் (அம்மணி)
உத்தமியேயானும்
இத்தநியேசென்று
சுத்தவீரனைப்போன்ற
சத்தியவேந்தனை
சித்தமகிழச்செய்து
உற்றசேதியுரைத்து
நித்யானந்தமாயுன்னை
மணம்புரியச்சொல்கிறேன்.

சகி-வசனம்,

அம்மணி ! அந்த அழகேசனுடைய திருவுருவதேஜஸைமந்தமுக

வசீகரசுந்தரத்தை சந்ததமும் பார்த்துக்கொண்டிருந்தாலும் ஆசை நீங்காதுபசியுண்டாகாது அந்தரமகளிரெனுங்கந்தர்வஸ்திரீகள்பார்த்தாலும் ஆச்சர்யத்துடன் மதிமயங்குவரென்றால் பூலோகத்து ஸ்திரீகள் கண்டால் என்னமாயிருக்கும் அம்மா ! அம்மா !! என்ன அழகு என்னஅழகு என்னசுந்தரம் இதனாலன்றோ அழகேசனென்னும்பேர் வாய்ந்தது, பாலசந்திரோதயம் போன்ற அவர்வதனத்திற்கிசைந்த விதமே சுவர்ணநிறமாய் விளங்கும் அவர்நெற்றியும் செந்தாமரைமலர் போன்ற நேத்திரங்களும் தனுசைப்போன்ற புருவமும் வள்ளைக்கொடியில் மின்மினிப்பூச்சுகள் பிரகாசிப்பதுபோலநவரத்தினகசித ஆபரணந்துலங்கும் இருசெவிகளின் அலங்காரமும் குமிழமலர்போன்ற நாசியும் முல்லையரும்பெனத் துலங்கும்பல்வரிசைகளும் மதுரவசனமாகிய சொல்லும் பார்க்க பார்க்க ஆசையாயிருக்கும் அந்தஅழகேசனுடைய ரூபசுந்தரத்தை வர்ணித்துச்சொல்வதற்கு யாவராலும் முடியாதென்றறிவீர் ஆகையால்அவரே உமக்கிசைந்த மணாளனாகுமென்றுணர்வீர் அம்மா

லலிதாங்கி-தரு.

இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

அவ்விதமான ரூப சிங்காரனையானும்
அன்பாய்மணம் புரிவேனோ. அவ்வித

அநுபல்லவி.

இவ்வுலகத்தினர் இன்பாய்ப்புகழ்ந்திடவே
எவ்விதமாயினும் எனைமணம்புரிவாரோ. அவ்வித

சரணங்கள்.

அல்லும்பகலும்யான் ஆலோசித்திருந்ததும்
அழகேசன்ரூபத்தை அன்பாய்நீவர்ணித்து
சொல்லும்போதேசகி சோருதென்றன்மனம்
சொந்தமணாளனென்றே சிந்தித்தேனன்மையாய். அவ்வித
மனதொருவிதமாக மாறுதென்செய்வேனோ
மானிலந்தனிலினி யானெவ்விதமாய்வேனோ
உனதுபுத்திரியைப்போ லென்னைமதித்துநீ
உடனே அழகேசனை அழைத்துவருவாயம்மா. அவ்வித

லலிதாங்கி-வசனம்.

சகி ! நீசொல்லும்போதே என்மனம்ஒருவிதமாய்சோர்ந்து மனமயக்கமானது இத்தருணம்எனது அன்னைக்குச்சமானமாகிய உன்னை யான் ஜீவித்திருக்கின்றேனன்றி எனதுஉயிர் நிலைப்பதரிதெனமதிப்பாய். அம்மா ! நீ என்மீது கருணைவாய்ந்து அந்தஅழகேசனை இக்கணம் அழைத்துவந்து என்னை அவருக்குத் திருமணஞ்செய்து வைப்பது உனதுகிருபை யென்றறிவீர்.

சகி.—வசனம்.

அம்மணி ! நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் யான் இத்தருணமே அளகாபுரிக்குச்சென்று அழகேசனிடம் நல்வார்த்தை பாஷித்து எவ்விதமாயினும் அவர்வந்து உன்னைத் திருமணம் புரியும்படியாகச் சொல்லுகிறேன் மனமகிழ்ந்திருப்பாயம்மா.

லலிதாங்கி - வசனம்

சகி ! நீ சொன்னதும் உண்மையே, ஆயினும் யான் ஓர் நிருபமெழுதித் தருகிறேன் அதை அவரிடத்தந்து எவ்விதமாயினும் அவர் இவ்

க்ஷணம் வந்து என்னைக் கலியாணஞ் செய்துகொள்ளும் படியாய்ப் புகல்வா யம்மணி.

சகி.—வசனம்.

மஹா சந்தோஷம் அவ்விதமே எழுதித்தருவா யம்மா.

—(*)—

லலிதாங்கி - நிருபமெழுதுவது.

சீட்டுக்கவி.

ஆசிரிய விருத்தம்.

சீரிலகுவாவியும் நந்தவனசோலைசூழ்
    சிங்கா ரலங்காரமாய்
சிவனடியர் துதிபரவும் தேவாலயங்கள் நிறை
    ஸ்ரீ அளகா புரியிலன்பாய்
பேரிலக ராஜரீகம்புரியும் மகிபனென
    மேசபுக ழானர்தனும்
பெருமைசே ரழகேச ராஜர்தி யதியவர்
    பொற்பாதம் போற்றிசெய்து
பாரிலகு சித்ரக்ஷேத்ரப் பதியின் அரசியான்
    பகருமா றெழுது நிருபம்
பார்த்திபனே யெனை திருமணம் புரிந்துநின்
    பத்தினியாய் மதித்து
தாரிலகு மகிபரும் அதிசயம் வாழ்த்தவே
    தனயர்களை யீன்றெடுத்து
தாரணியிற் கீர்த்தியாய் வாழ்ந்திருப் போமென்று
    தம்மையான் நம்பினேனே.

உ

இங்ஙனம்,

ஸ்ரீ தங்கள் பிராணநாயகி.

லலிதாங்கி,

சித்ரக்ஷேத்ர புரம்.

8 லலிதாங்கி - வசனம்.

சகி! இந்த நிருபத்தை அவர் கையிற் றந்து எவ்விதமாயினும் அவர் என்னைத் திருமணம் புரிந்துக்கொண்டு பெருமையாய் வாழ்ந்திருக்கும்படியாய்க் கிருபை புரியவேணுமம்மா. அன்றியும் நீயே எனக்குத் தாயெனமதித்தேன்.

சகி.—வசனம்.

அம்மணி! நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம், இதோ யான் சென்று அவரை இங்ஙனம் அழைத்துக்கொண்டு வருகிறேன்.

லலிதாங்கி - வசனம்.

மஹா சந்தோஷம் போய்வருவா யம்மா.

(தாதி அளகாபுரிக்குப் போவது.)

அளகாபுரி.

அழகேசன் தர்பார்.

விருத்தம்.

ஆதியாயனாதியாகி அன்பர்கள் மனதில்நாளும்
சோதியாய்ப் பிரகாசிக்கும் சுடரொளி விளக்காய்நின்று
பாதிமாமதியணிந்த பரமனே கைலைவாழும்
நீதியே எனதுசெங்கோல் நிலைத்திடச் செய்வாய்போற்றி.

மந்திரி - விருத்தம்.

சத்தியம்பிசகிடாமல் தாணியாள்மகிபாபோற்றி
எத்திசையோரும்வாழ்த்தும் ஜெயமிகும்மன்னாபோற்றி
அத்தனை தினந்துதிக்கும் அரசர்கட்காசேபோற்றி
பக்தியிற்சிறந்தயெங்கள் பார்த்திபாபோற்றிபோற்றி.

மந்திரி-வசனம். அரசே! நமஸ்கரிக்கின்றேன்.

அழகேசன் - வசனம். கல்யாண்! மந்திரி!

———(*)———

தேசவிசாரணை.

அழகேசன் - தரு.

மாரிகுறையின்றி மாநிலந்தன்னில்
மாசுகிபாய்ப் பொழிகிறதா - மந்திரி
பாரினில்யாதொரு குறையின்றிதானிய
பயிர்கள் விளைகிறதா

வசனம்.

மந்திரி! நமது நகரத்தில் சந்ததமும் மழைபொழிந்து நவதா[illegible] னியமும் நெல் கோதுமை முதலான பயிர்களும் யாதொரு குறைவி[illegible] செழிப்புற்று விளைகிறதா?

மந்திரி - தரு.

சத்தியமன்னனே இந்தரணியில்மழை
சதாகாலம் பொழிகிறது
நித்தியானந்தனே செந்நெல்கோதுமையும்
நீடுழிவிளைகிறதே.

வசனம்.

அரசே! உமது உத்தமகுணத்திற்குக் கர்த்தன் அருள் [illegible] இருக்கிறபடியால் நமது நாட்டிற்கு யாதொரு குறையுமின்றி வ[illegible] பகவான் கிருபையால் சதாகாலமும் மழைபொழிந்து நெல், கோ[illegible] மை, தினை, சாமை, சோளம், வரகு முதலான பயிர்களும், துவ[illegible] உளுந்து, கடலை முதலாகிய தானியங்களும் யாதொரு குறைவி[illegible] செழித்து விளைகின்றது வேந்தே.

9

அழகேசன்-தரு.

செப்பரும்ஞான வைராக்யமாயனைவரும்
சிவஸ்துதி செய்கிறார
முப்பத்திரண்டறம் குறைவின்றியனுதினம்
முயற்சியாய் நடத்துறார.

வசனம்.

மந்திரி! நமது தேசத்தில் வசிக்கும் நகரவாசிகள் அஷ்டவித துர்க்குணத்தையு மொழித்து பஞ்சமாபாதகங்களை புரியாமல் பரம சிவத்தின் திருவடிக்கன்பராய் விளங்கி தானதர்ம பரோபகாரம் புரிந்து நித்யானந்தமா யிருக்கின்றனரா.

மந்திரி-தரு.

தர்மசொரூபியாய் தானதர்மங்கள்
தாணியோர்புரிகின்றார்
கர்மானுசார மகத்தியமெய்ஞ்ஞானிகள்
கர்த்தனைத் துதிக்கின்றார்.

வசனம்.

அரசே! நமது நகரினில் விளங்கும் குடிபடைகளனைவரும் தான தர்ம பரோபகாரம் புரிந்து சத்விஷய தர்மகைங்கர்ய பகவத் பிரீதியானந்த உத்தமகுணமமைந்து சதாகாலமும் பரமேஸ்வரனைப் பூசித்துக்கொண் டிருக்கின்றனர் அரசே!

அழகேசன்-வசனம்.

மந்திரி! யாவும் சிவன்செயலன்றி மனச்செயலன்று சகல ஜீவ ராசிகளையும் சிருஷ்டித்து அவைகட்குரித்தாகிய உணவளித்து போ ஷித்துக் காப்பாற்றும் பரமேஸ்வரன் கருணையினால் நமது நகரிற் கொரு பழுதுமுறாதென்று நம்புகின்றேன்.

மந்திரி-வசனம்.

அரசே, எல்லாம் சரிதான்! ஆனால் என்மனதில் ஒரு பரிதாப மான குறையிருக்கின்றது. அது உமது கிருபையால் நிவர்த்தியாகு மென நம்புகிறேன். அதற்கு நீர் சம்மதிப்பீராகில் மிகவும் உத்தமமா யிருக்கும் மஹாப்ரபு.

அழகேசன்-வசனம்.

மந்திரி! நீ சொல்வதை கவனித்திடில் ஆச்சர்யமாயிருக்கின்ற வே. அஃதென்ன சங்கதியோ? யான் கவனித்துணர்க விபரமாய்ச்

புகல்வாயாகில் மின்மனமகிழ உனக்கு யாதுவேண்டுமோ அவையனைத்தும் தருகிறேன். அன்றியும், இந்த இராஜ்ஜியத்தை கேட்டாலும் இப்போதே தந்துவிட்டு யான் மரவுரி தரித்துக்கொண்டு துறவறமெய்தி பெரியோர் திருவருளையேற்று அருந்தவம்புரிந்து பரமேஸ்வரன் கிருபையால் ஞானானந்த யோகீஸ்வரனாகின்றேன். சிவசிவா ஜெயபரமேஸ்வர மஹாதேவா,

மந்திரி-வசனம்.

சிவசிவா கைலாசவாசா! அரசே! யாதுவார்த்தைப் புகல்வதாயினீர்? தர்மசிந்தைவாய்ந்த இராஜேஸ்வரராகிய உம்மைத் துரத்திவிட்டு யான் இந்த இராஜ்ஜியத்தை அபகரித்துக்கொள்ள ஆசையுற்றவனல்ல. நீர் ஓர் கன்னிகையைத் திருமணம் புரிந்துக்கொள்வீராகில் சத்தியநெறி தவறாத உத்தமராகிய உமது சந்ததிபெருக ஓர் மைந்தன் ஜனித்து இந்நகரத்தைப் பரிபாலனஞ் செய்துக்கொண்டிருக்கவேண்டுமென்று கோருகிறேன் மஹா ப்ரபு.

அரசன்-வசனம்.

ஆ! ஹா! மந்திரி, நல்லவார்த்தை பகர்ந்தனையே, என்னை சம்சார சாகரத்தில் துன்புறச்செய்து வேடிக்கைப் பார்ப்பதற்காகவோ ஆலோசித்தனை, சரி! சரி!

அழகேசன் சொல்வது.

அறுசீரடி யாசிரிய - விருத்தம்.

நிஷ்டையிலே யிருந்து மனந் துறவடைந்தபெரியோர்க
ளிமலன் சேர்வை
கிட்டையிலே தொடுத்து முத்தி பெருமனவும் பெரியசுகம்
கிடைக்குமாந்தர்
இஷ்டமதாய்த் தமதருமை மைந்தருக்கு மணம்பேசி
விரும்பித்தாலி
கட்டையிலே தொடுத்துநிக் கட்டையிலே யிடத்துமட்டும்
கவலைதானே.

அழகேசன் - வசனம்.

மந்திரி! நீ சொல்வதைக் கவனித்தால் ஆச்சரியமாயிருக்கின்றதே உலகில் ஜனித்த மாந்தர்கள் அஞ்ஞான மார்க்கத்தையொழித்து மெய்ஞ்ஞானிகளாய் பரமசிவத்தின் கிருபையேற்று அருந்

தவம் புரிந்து யோகாப்பியாசமாய் பரகதி யடையும் வரையிலும் மிகவும் ஆனந்தமாகவே இருப்பார், அஃதன்றி, அற்பசுகத்திற் கிச்சித்து பெண்ணாசையை விரும்பியவர்கட்குத் தாய் தந்தையர் யாதாமொரு கன்னிகையைக் கலியாணஞ் செய்துவைத்தநாளிலிருந்து எமபுரிக்குப் பிரயாணமாகும் வரையிலும் பாசபந்தத்தினாற் கஷ்டநிஷ்டூரமெய்தி அநேகவித துயருற்று நிஜானந்தமாய் நிஷ்டை புரிவதற்கும் நேரமின்றி மனதைப் பற்பலவிதமாய்ச் செலுத்தி தீராக்கவலையுற்று வருந்தப்படுவர் ஆகையால், யான் அவ்வித ரௌரவபயங்கர ஆபத்தாகிய சம்சாரத்திற் குரித்தாகிய கலியாணஞ் செய்துக்கொள்வேனென்று கனவிலும் நினையாதே.

மந்திரி சொல்வது.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

அரசேயென்வார்த்தையை அலக்ஷியமாயெண்ணாமல்
ஆலோசித்திடுவீரே,

அநுபல்லவி.

தரணியில்வசித்திடும் தபசிகளனைவரும்
திருமணம்புரியாம லிருந்தனரோசொல்வீர், (அர)

சரணங்கள்.

வசிஷ்டர்அருந்ததியை மணந்திருக்கவிலையோ
வால்மீகர்மணமில்லா வனத்திலிருந்தாரோ
மகிக்கும்தபோதனர் மனைவிமைந்தருடனே
மாநிலத்தில்வாழ்ந்து பரகதியடைந்தாரே, (அர)

பார்வதிநாயகன் பரமனென்றறியாயோ
பிர்மதேவன்தேவி சரஸ்வதியல்லவோ
சீர்பெருஞ்ஞானவான் ஜனகமஹாராஜன்
திருமணமின்றியே தரணியிலிருந்தாரோ. (அர)

பத்தினியுடனாய் பாரினில்வாழ்வதே
பகரும்இல்லறம் தர்மமென்றுணர்வீரே
இத்ததிருமணம் இன்பாய்ப்புரிவீராகில்
இகத்திற்கீர்த்தியும்பெற்று பரத்தில்முக்தியடைவீர். (அர)

வசனம்,

அரசே! உலகிற்ஜனித்த மாந்தர்களனைவரும் தமது வாலிபதிசையிற்றானே நற்குணமமைந்த உத்தம ஸ்திரீகளைத் திருமணம்புரிந்து பெருமையாய் வாழ்ந்து தமது சந்ததிபெருக மைந்தரைப் பெற்று மனோல்லாசமாயிருப்பது இல்லறமார்க்கத் தியல்பு. இத்தகைய நன்மார்க்கத்திற்கிசைந்தவை மற்றொன்று மில்லையென்றே அநேக மஹான்களும் அருந்தவம் புரியும் ரிஷீஸ்வரர்களும் முனிவரும் கற்றுணர்ந்த கவிஞரும் "இல்லறமல்லது நல்லறமன்று" என்னும் சாஸ்திரவிதியை யநுசரித்து மனைவி மைந்தருடன் வாழ்ந்திருக்கின்றனர். அன்றியும், பிரமரிஷியாகிய வசிஷ்டரும், தபசிரேஷ்டராகிய வால்மீகி, பராசர், வியாசர், முதலான மஹான்களும் மனைவி மைந்தருடனே வாழ்ந்திருந்தனரே யன்றி உம்மைப்போல் தனிமையாயிருக்கவில்லையே, ஆதலாற் றாம் கவனித்து நீர் உமது சந்ததிபெருக மைந்தன் வரம்பெறுதற்கு ஓர் கன்னிகையைக் கலியாணஞ் செய்துகொண்டு சுகானந்தமாயிருப்பீர் மஹாப்ரபு,

அழகேசன்-வசனம்,

ஜெயசங்கர மஹாதேவா! சர்வேசா! என்ன விபரீத வார்த்தையைக் கேட்கலாயிற்று, மந்திரி இனி இத்தகைய அபவார்த்தையை பாஷிக்க வேண்டாம்,

மந்திரி-வசனம்.

அரசே! என்மீது நீர் இவ்விதமாய் கோபித்துக் கொள்வது நன்கல்ல. பரமேஸ்வரன் எவ்விதமாயினும் உமதுமனதை இல்லறமார்க்கத்திற்பிரவேசிக்கச் செய்குவரென நம்புகிறேன் மஹாப்ரபு.

அழகேசன்-வசனம்,

சரி! சரி! இனி இவ்வண மிருக்கலாகாது சற்றுநேரம் தாமதித்திருந்தோமானால் மனது விபரீதமாய்க் கலைந்து உலகவாசனையினால் பாசந்தம் சூழ்ந்து நமது பக்தியைச் சிதறச்செய்து அஞ்ஞான மார்க்கத்திற் பிரவேசிக்கச்செய்து அப்பொருது சம்சாரத்தாற் றிகைக்கும்படியாய்ச் செய்யுமாதலால் இனி நாம் ஏகாந்தமாளிகையிற்சென்று பரமேஸ்வரனை தியானித்துக் கொண்டிருப்போம் இதுதான் தகுந்த யோசனை,

மந்திரி - வசனம்.

ஆ! ஹா! இஃதென்ன ஆச்சர்யம்? நமது அரசன் மனம் இவ்விதமாய் சிவபக்தியிற்சிறந்து யோகானந்தமாயிருக்கின்றனவே, இனி இதைக்குறித்து நாம் ஆலோசிப்பதினாற் பயனொன்றுமில்லை யாவும் சிவன்செயல்தான்.

{ ஏகா[illegible]கையில்
சிவ[illegible]செய்வது. }

—(*)—

அழகேசன் - தரு.

கருணின்சுர கருணாகரா (யென்ற வர்ணமெட்டு)

பல்லவி.

கிருபைசெய்குவாய் பரமேஸ்வரா (கிரு)

அநுபல்லவி.

தருணமெனக்குன் னருள் தாரும்ஜோதி. (கிரு)

சரணங்கள்.

நரனாகயிந்தப் பாரிலிற்பிறந்தும்
நலமேதுங்காணு அலைச்சலுற்றேனே (கிரு)

துர்க்குணமெந்தனைத் துடராமற்காரும்
சர்ப்பாகவல்லிநாதா கபாலீஸ்வரனே (கிரு)

பாசபந்தத்தாற் பரதவிக்காமல்
ஈஸ்வரனேயுந்தன் திருவருள்தாரும். (கிரு)

வசனம்.

பரமேஸ்வரா மஹாதேவா! ஞானைக்க திவ்யசொரூபமே அடியேன் மனக்கவலையகற்றி சந்ததமும் சிவத்தியானமாயிருந்து யோகானந்த பரவசமடையும்படியாக கிருபைபுரிவாய் முத்திக்கு வித்தாகிய கர்த்தவ்யமே.

தேவாரம்.

கையில்மான் மழுவுமேந்தி கங்கையைச் சடையிற்சூடி
மெய்யெலாந் திருவெண்ணீறு மேன்மையாயணிந்தநாளும்
மையர வணிந்தமார்ப பரமனே உமாமகேசா
ஐயனே யுனைப்பணிந்தேன் அஞ்சல்ஹரா கைலைவாசா.

கலிவிருத்தம்.

சுத்தஞான சுயம்புவேசைதன்ய
நித்யனுகிய நிர்ம்மலஜோதியே
பத்தியாகப் பணிபவர்க்கன்புடன்
முக்திமார்க்க முதவும்சிவசிவா.

சிவசிவாவென சிந்திக்குமன்பரின்
பவமொழிக்கும் பரப்பிர்ம்மஜோதியே
தவமுனிவரமரர் பணிந்திடும்
சிவப்ரகாச சிவானந்தபோதமே.

ஞானபோத நமசிவாயவென
[illegible]ரனவரவுணர் முனி சித்தர்கள்
வா[illegible]வர்களனுதினம் போற்றுமெய்ஞ்
ஞானரூபமே நம்பினேன் காருமே.

வசனம்.

கைலேயகிரிவாசா! கருணைகரா பக்தர்கட்கனுதினமும் யாதொரு குறைவுமின்றி காத்தருளும் மெய்ஞ்ஞானஜோதியே அடியேன் சந்ததமும் நின் மெய்யன்பனுய்விளங்கி ஞானானந்த முக்தியிலே யனுக வரமருள்வாய் பரமேஸ்வரா.

{ அளகாபுரியின் அரண்மனையில் சகிவருவது. }

——(*)——

சகி.—வசனம். சேவகா! யான் வந்திருப்பதாக அரசனுக்குத் தெரிவிப்பாய்.

சேவகன் - வசனம். நீ யார்?

சகி.—வசனம். யான் சித்ரக்ஷேத்திரப் பதியின் அரசியாகிய லலிதாங்கியின் தோழிப்பெண்.

சேவகன் - வசனம். யாது காரணமாக வந்தனை.

சகி.—வசனம். இந்நகரத்தின் அரசனுகிய அழகேசனை லலிதாங்கி திருமணம் புரிவதற்காக திருமுகமெழுதி யென்னிடந்தந்து அனுப்பினுள்.

சேவகன் - வசனம். சரி! சரி! நமது அரசனுக்கு ஸ்திரீகளின் மீது விருப்பமில்லையே அவர் சம்மதிப்பாரோ நமக்கென்ன மந்திரியினிடம் சொல்லுவோம்.

(தோழிப்பெண்ணை அழைத்துச்செல்வது.)

சேவகன் - வசனம். ப்ரபு! இந்தப் பெண் திருமணப்பத்திரிகை எடுத்துக்கொண்டு வந்திருக்கின்றனள்.

மந்திரி - வசனம்.

மஹாசந்தோஷம் சேவகா! நமது அரசனிருக்கும் மாளிகையைக் காண்பிப்பாய் பெண்ணே. நீ அங்ஙனம் சென்றவ்விதமே நீயும் அழகேசன் மனதைக் கவர்ந்து லலிதாங்கியை கலியாணஞ் செய்துக் கொள்ளும்படியாகச் சொல்வது உனது சாமார்த்தியம்.

சகி.—வசனம். அப்படியே மஹா சந்தோஷம் [illegible]

சேவகன் - வசனம்.

பெண்ணே! அதோ பார்த்தனையா அழகேசன்பக்தியானந்தமாய் பரமேஸ்வரனை தியானித்துக் கொண்டிருக்கின்றனர். நீ எவ்விதமாவது யாசித்து லலிதாங்கியைத் திருமணஞ் செய்துக்கொள்ளும்படியாகச் சொல்வாய் மாதே.

சகி.—வசனம். அப்படியே, மஹா சந்தோஷம், இவரென்ன யோகானந்தமா யிருக்கின்றனரே. சரி அருகிற்சென்று விசாரிப்போம்.

அழகேசன் - சொல்

தேவாரம்.

ஆதியே யன்பர்வாக்கில் அனுதினம் வசித்திருந்து
ஜோதியா யிலகுந்திவ்ய சுடரொளி சொரூபமாகி
பாதிமா மதியும்நீரும் பையரவணிந்த வுந்தன்
பாதமே கதியென்[illegible]திட்டேன் கைலைவாழ்வே.

சகி.—வசனம். இராஜ[illegible]ஸ்வரா நமஸ்கரிக்கின்றேன்.

அழகேசன் - வசனம். [illegible]ணே நீயார்?

சகி.—வசனம். அரசே யான் [illegible]த்ரக்ஷேத்திரப் பதியின் அரசியாகிய லலிதாங்கியின் தோழிப்பெண்.

அழகேசன் - வசனம். யாது காரணமாக வந்தனை?

சகி.—வசனம். திருமணப்பத்திரிகை கொண்டுவந்தேன். பாரும் மஹா ப்ரபு.

அழகேசன் நிருபத்தை வாசிப்பது.

சீட்டுக்கவி.

ஆசிரியவிருத்தம்.

சீரிலகுவாவியும் நந்தவனசோலைசூழ்
சிங்கா ரலங்காரமாய்
சிவனடியார் துதிபாடவும் தேவாலயங்கள் நிறை
ஸ்ரீ அளகா புரியிலன்பாய்
மேலிகை ராஜரீகம்புரியும் மகிபனென
பேர்சுக பூரணர்தனும்
பெருமைமிகுசே ரழகேச ராஜாதி பதியவர்
பொற்பாதம் போற்றிசெய்து
பாரிலகு சித்ரக்ஷேத்ரப் பதியின் அரசியான்
பக்ஷமா யெழுது நிருபம்
பார்த்திபனே யெனை திருமணம் புரிந்துநின்
பத்தினியாய் மதித்து
தாரிலகு மகிபருக் கரிதாரும் வாழ்க்கவே
தனியர்களை மீண்டெடுத்து
தாரணியிற் கீர்த்தியாய் வாழ்ந்திருப் போமென்று
தம்மையான் நம்பினேனே.

இங்ஙனம்,
தங்கள் பிராணநாயகி.
லலிதாங்கி,
சித்ரக்ஷேத்ர புரம்.

அழகேசன் - வசனம்.

சீ! பிரஷ்டி. எதிரில் நிற்காதே தப்பித்துக்கொண்டு ஓடிப் போவாய்.

சகி.—வசனம். இதென்ன ஆச்சர்யம் இவ்விதமும் சொல்வாருண்டோ? சரி நமக்கென்ன நாம்சென்று லலிதாங்கிக்கு சொல்லிவிட்டுப் போய்விடுவோம். இதுதான் தகுந்த யோசனை.

13

சித்ர க்ஷேத்ர புரம்.

லலிதாங்கியின் மாளிகை.

லலிதாங்கிசொல் தரு.

ஆஹசனே (யென்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

ஆ சகியே யாது செய்வேன்
அளகாபுரிக்குச் சென்றவரின்னும்
வரக்காணனே. (ஆ)

அநுபல்லவி.

அழகேசன் கரத்திலிரும்
அன்புடனே தந்தானோயாமோ
கழறவரையுந்தன் சகியே
காரணம்யாதோ தெரியேன். (ஆ)

சரணங்கள்.

இன்னமும் மைக்காணுமையால்
என்மனம் பதறுதே சகி
அன்புடனே சென்றுவிரும்பம்
அரசன்கையில் தந்தானோயாமோ. (ஆ

தான்போகாத காரியத்திற்கோர்
ஆளனுப்பினால் முடியுமோ
நான்சென்று பார்த்துவருக
நங்கையே யோசிக்கலானேன். (ஆ)

வசனம்.

சகி! எனது மனதிற் கிசைந்த மணாளனாகிய அழகேசனுக்குத் திருமணப்பத்திரிகை தருவதற்குச் சென்றதோழிப்பெண் இன்னமும் வராதகாரணம் யாதோ? ஒருவேளை அந்தப்புரத்திற்குச் சென்றனளோ? இல்லையோ? யாதுந்தெரியவில்லையே.

சகி ப்ரவேசம்.

சகி (வசனம்.) இராஜேஸ்வரி நமஸ்கரிக்கின்றேன்.

லலிதாங்கி (வசனம்.) கல்யாண் சகி! நீ சென்றகாரியம் ஜெயந்தானோ? யான் மனமகிழ விபரமாய்ப் புகல்வாயீ.

சகி (வசனம்.) அம்மணி! அந்த அழகேசன் பெண்காற்று வீசலாகாதென துரத்திவிட்டனர். அவ்விதமிருந்தும் யான் எவ்வளவோ தந்திரமாய் அருகிற்சென்று திருமணப் பத்திரிகையைக் கையிற்றந்தும் அவர் சற்றேனும் யோசித்துணராமல் நாய் போற் குலைத்து பேய் போற் சீறி என்னையும் துரத்தி விட்டனரம்மா! இனி அவரைக்குறித்து ஆலோசிப்பதாற் பிரயோசனமில்லை மற்றெந்த அரசர்களையாகிலும் மணம்புரிவீராயம்மா.

லலிதாங்கி (வசனம்.) சீ! பிரஷ்டை யீது வார்த்தைப் புகன்றனை இதோ யானே சென்று அவரை இங்ஙனம் அழைத்துக் கொண்டு

வந்து திருமணம் புரிவேனேயல்லாமல் அன்னிய அரசரை மனதில் நினையேனென்றறிவாய்.

சகி (வசனம்.) அப்படியே மஹா சந்தோஷமம்மா.

(லலிதாங்கி-அளகாபுரிக்குச்செல்வது.)

அழகேசன்.

சிவத்தியானமாயிருப்பது.

லலிதாங்கி - தரு.

பல்லவி.

இவர்தான் இவர்தான் இவர்தான் எனக்குகந்த
இனியவாசக மணாளன்.

அநுபல்லவி.

தவயோகிகளைப்போல பரமனைப்பூஜித்து
அவனியைப்புரந்திடும் அழகேசனென்பவர் (இவர்)

சரணம்.

அந்தரத்திலுலாவும் கந்தர்வஸ்திரீகளும்
சந்ததம்பூஜித்து சிந்தைமகிழ்வெய்தும்
சுந்தரேசன்போல சொரூபசிங்காரனிவர்
காந்தன்மணாளனாக என்னபுண்ணியஞ்செய்தேன் (இவர்)

வசனம்.

ஆ! ஹா! இவர் அழகானந்த முகவசீகர தேஜஸமைந்த திருவுருவைக் கண்டால் கந்தர்வ ஸ்திரீகளும் மதிமயங்க மெய்யுருவரெனின் இந்த உலகத்திலோர் இவருக்குச் சமானமாவரோ? அன்றியும் யான் இவரைத் திருமணம் புரிவதற்கு முன் ஜனனத்தில் என்ன புண்ணியஞ் செய்திருந்தேனோ? அறிகிலேன்.

அழகேசன் (வசனம்.)

சிவா! சிவா! பரமேஸ்வரா சங்கர சம்போ மஹாதேவா.

லலிதாங்கி (வசனம்.) இவரென்ன சந்ததமும் சிவத்தியானமாயிருக்கின்றனரே. சரி இனி நாம் தாமதிக்கலாகாது, அருகிற்சென்று மதுர வசனமாய் பாஷிப்போம்.

லலிதாங்கி (வசனம்.) பிராணநாதா! நமஸ்கரிக்கின்றேன்.

அழகேசன் (வசனம்.) பெண்மணி! நீயார்? நீவசிப்பது எந்நகர் யாதுகாரணமாக இங்ஙனம் வந்தனை?

லலிதாங்கி (வசனம்.) பிராணநாதா, யான் சித்திர க்ஷேத்திரப் பதியின் அரசி எனக்குத் தகுந்தமணாளன் உம்மையன்றி மற்றொருவ ரில்லை யென்ப துணர்ந்து உம்மைத் திருமணம் புரிந்துபெருமையாய் வாழ்ந்திருப்பதற்கு ஆவலுற்றிருக்கின்றேன்.

அழகேசன் (வசனம்.) சீ! பிரஷ்டி! அஞ்ஞான மார்க்கத்தில் நிலைத்தமாயையென்னு அதிருநாற் படுக்கிற கேடு காரணமின்றிய பெண்மணி! யான் ஸ்திரீகளை விரும்பேன் நீ என் அருகில் வரவேண்டாம்.

லலிதாங்கி (வசனம்.) நாதா! உலகமே ஸ்திரீகளின் மாயசம்பந்த மாயிருக்க நீர் சொல்வதை கவனித்தால் ஆச்சரிமா யிருக்கின்றதையே.

அழகேசன் தரு (கமாஸ்-ஆதிதாளம்.)

பல்லவி.

மாதரானை பொல்லாதபெண்ணே

நீ தொலைந்துபோவாது.

அநுபல்லவி.

பூதலமேல்பெரும் போதமுற்றிய

நீருமே வரும் ஆகையினாலே (மாத)

15

சரணங்கள்.

அருமஞ்சட் பூச்சல்லவோமுகங்காந்தி
அடிக்கடி பெண்கள்நிறம் மாறும்பச் சோந்தி
ஒருமையா யவர்களை விரும்புதல் பிராந்தி
உயிர்த்தோர்களைப்பார்த் தால்வரும்வாந்தி (மாத)

முன்னழகும்பின்னழகுமேபட்டு
முகஅழகானதும்ந்திரியில்பொட்டு
அன்னநடை யென்பது கவிஞர்கள் கட்டு
அழகு இல்லாமல்பறந்திடுஞ் சிட்டு- (மாத)

மரித்திடும் மாதர்கள் சுகம் அனைத்துமே
மனதிபிஷத்தில் உண்டாக்குமன்ப ரனைமே
பிடித்திடில்மலஜலம் வழும்பு நோதலினாலே
பிராணன் போனால் நரி நாய்பிடுங் கிடுமே (மாத)

மேனிமுழுதும் வெளி வேஷத்தின் தருக்கு
மினுக் கென்னை பூசியே நாட்டுவார் களுக்கு
ஈனமின்றி தினம் தண்ணீர் முழுக்கு
இல்லையிடில் கப்ப லேற்றலா மழுக்கு. (மாத)

இடையில் அணிவது சாயப்பன் சேலை
இருகாதில் ஜொலிப்பது தட்டான்கைவேலை
கடையிலே விற்பது கொண்டைப் பூமாலை
கன்னிக்குசொந்தமெல்லாம்கடை மருந்தாலே (மாத)

கன்னியர்விழி உயிர் பிளந்திடும் அம்பு
காலன் பாசமெனும் பொல்லாத தும்பு
அன்னிய மாதர்கள் விஷமென்று நம்பு
அவருடன் பேசுவதே பெரும் வம்பு (மாத)

கழுவி வாசனை யிட்டாயிடில் கெட்டவிச்சு
காதவழி அடிக்கும் இதுநிஜப் பேச்சு
தொழும் அழகென்பதெல்லாம் மேற் பூச்சு
தோகையர்கிழமானல்கனவுச்சு (மாத)

அழகழ கென்பதெல்லாம் வெறும் ஜாலம்
அணியுந் தூற்குணத்திற் கிசைந்திடுங் கோலம்
விழியிலும் சுகத்திலும் வெறுப்பது சீலம்
வேத விநாயகன் சொல்லிது கூலம். (மாத)

அழகேசன் வசனம்.

பெண்ணே! உலகிற்றுவித்த மனிதர்களில் லோகர், பெண்களை விரும்பாமல் நித்தியானந்தமாய் விளங்குகின்றனர். அஃதன்றி சித்திரப் பதுமைகளைப்போன்ற ஸ்திரீகளை விரும்புகின்றவர் வெகு துயரடைவர். ஆகையால், யான் பரமசிவத்தின் பக்தியானந்தமாயிருப்பேனன்றி உன் மனதின்படி சம்மதியேன் என் அருகில் நிற்காமல் ஓடிப்போவாய்.

லலிதாங்கி தரு.

பரமசிவமே (யென்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

திருமணம்புரிந்துயாம் தரணியில்வாழ்வது
பெருமையாகும் மன்னா. (திரு)

அநுபல்லவி.

அருமைப்பிரகாச ஜனனமெடுத்துநாம்
தருணமணமின்றி தவிப்பதுநன்கல்ல. (திரு)

சரணங்கள்.

வாலவயதுதான் வருமோமங்கினி
வையகத்தோர்க்கிது வழங்கும்நீதிதானே
சீலருணரே சிவனயன் திருமாலும்
திருமணம்புரியாம லிருந்தாரோகவனிப்பீர். (திரு)

இல்லறமல்லது நல்லறமன்றெனை
இருடிகபோதனரும் முனிவரமரரும்
நல்லகுணமமைந்த நங்கையரைமணந்து
நவிலும்புகழாக ஞாலத்தில்வாழ்ந்தாரே. (திரு)

இளம்பருவஞ்சென்று முதுமையடைந்தபின்
யாதேனும்சுகமுண்டோ இராஜேஸ்வராயுணர்வீர்
வழங்கும்சாஸ்திரமெல்லாம் வாசித்துமிவ்விதம்
வார்த்தையாடுதல்நன்றோ கீர்த்திசேர்மன்னவா. (திரு)

வசனம்.

பிராணநாதா! நீர் சகல சாஸ்திரபுராண நான்மறையனைத்தும் வாசித்துணர்ந்தும் அறியாத் தன்மைபோலும் பாஷிப்பது நன்றோ? இத்தருணமே நாமிருவரும் திருமணம்புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்போம் வருவீர்.

—(*)—

அழகேசனுக்கும் லலிதாங்கிக்கும்

தர்க்கம்.

கார்த்தருள் கார்த்தருள் (யென்ற வர்ணமெட்டு.)

அழகேசன் - தரு.

விலகிநில் விலகிநில்
பெண்டிலே மாந்தனை தீண்டாதே பொற்கனை. (விலகி)

லலிதாங்கி - தரு.

நாயனேசிங்காரா நம்பிவந்தேனே
நீயாவமோயெனை ஆர்த்துதல்மன்றா.

அழகேசன் - தரு.

அருகில்நிற்காமல்விலகிப்போவாய்.
ஆக்கினைவிதிப்பேன் பாதகியே. (விலகி)

வசனம்.

ஆ! பரமசிவமே இதென்ன அநியாயம் யான் சிவத்தியானத்திலிருக்கும் தருணத்தில் இந்தப் பாதகி என்முன்வந்து இவ்வித அநியாய வார்த்தை பாஷிக்கின்றனளே சங்கர சம்போ.

லலிதாங்கி தரு - வாரும் சர்வேஸ்வரா (என்றவர்ணமெட்டு.)

வாருமையா இதுநற்காலமே
பருவத்தில்மணந்தா லல்லோநலம்

அழகேசன் தரு.

பாதகிஎன்னிடம் வாதுசெய்யாதே நீ.

லலிதாங்கி தரு.

நீதனேஎந்தனை திருமணம்புரிகுவாய்.

அழகேசன் தரு.
சீ சீ துஷ்டி நில்.
தூர எட்டி நில்.

லலிதாங்கி தரு.
வாரும் மன்னவா.
தீருமென் துயர். (வாரு)

லலிதாங்கி - வசனம்.

பிராணநாதா! நீர் என்னை இவ்விதமாய்த் துரத்தினாலும் யான் உம்மைவிட்டுப் பிரிவேனோ? எவ்விதமாயினும் என் மனத்துயர் தீர்த்து என்னைத் திருமணம் புரியாவிடில் தற்கொலை செய்துக்கொண்டு என் பிராணனை இங்ஙனமே விட்டுவிடுவேன் இது உண்மையென்றுணர்வீர் நாதா.

அழகேசன் - வசனம்.

ஆ! ஹா! இதென்ன தர்மசங்கடம் பரமேஸ்வரா! ஜீவகாருண்யத்திற்குப் பழுதாகும்போற் காணப்படுகின்றனவே, இனி தாமதித்தால் ஆபத்தாகும்! அடா சேவகா!

சேவகன் - வசனம். என் இராஜேஸ்வரா.

அழகேசன் வசனம்.

இந்தப் பாதகியின் கால் கைகளுக்கு விலங்கிட்டு வனத்திற் கொண்டுபோய்விடுவீர்.

சேவகன் - வசனம். அப்படியே மஹாபாக்கியம் இராஜேஸ்வரா.

லலிதாங்கியின் கால்கைகளுக்கு விலங்கிட்டு வனத்திற்கொண்டுபோய் விடுவது.

லலிதாங்கி தரு.

தந்திரமாரியிந்திரோ (யென்ற வர்ணமெட்டு.)

சர்வேசாயானென் செய்குவேன்
சங்கரனே சம்போ
தருணமென் தலைவிதி இவ்விதமாச்சதோ, சர்வே

பாரினில் யாரோர்பெண்ணாக
பிறந்ததும் போதும்
பதியைவிட்டு தனிமையாய்
பரதவிக்கின்றேன். சர்வே

சஞ்சலமாகுதேமனம்
கருணாகரனே
அஞ்சேலென்றனை ஆதரிப்போர்
யாருமில்லையே சர்வே

வசனம்.

கருணாகரா! கைலாசவாசா! கர்த்தவ்யமோ யான் இவ்விதமாய் துயரப்படுதற்கு யான் முன் ஜனனத்திற் செய்த ஊழ்வினைப்பயனோ? என் தாய்தந்தையர் செய்த தவப்பயனோ? அறியேனே ஜெகரக்ஷகா.

ஆண்பூதம் ப்ராப்தம்.

ஆண்பூதம் தரு.

(முருகையனே வருவாய்) என்றவர்ணமெட்டு.

இரைதேடி யலைகின்றேனே - யான்
இரைதேடி யலைகின்றேனே. (இரை)

அருங்கானகமெங்ஙனும்
மிருகங்களகப்படா
அலைந்துதேடித்திரிந்தும்
இருக்குங்காரணமேதோ (இரை)

வயறுபசிக்கு இந்த
வாக்கணங்கிலேனென்ன
வனத்திலோர்மிருகமும்
காரணமோதானோ (இரை)

கரடிப்புலியானைகளும் காட்டெருமைபன்றியும்
நரிமுயலினங்களும் வரக்காணவில்லையே (இரை).

வசனம்.

ஆ! ஹா! இதென்ன அதிசயம் நாம் இந்த ஆரண்யமெங்குனும் தேடித்திரிந்தும் ஒருமிருகங்களேனும் அகப்படவில்லையே இன்றையதினம் எவ்விதமாய் யான் பசிதணிவேன்:—ஆ! இதென்ன ஏர்மாம்ஸ பக்ஷணமொன்று அழுதுகொண்டிருக்கின்றதே அருகிற்சென்று நமது பசி தணிய புசிப்போம், ஆ! ஹா இந்தப்பெண் அதிக சிங்கார ரூப சுந்தரமாயிருக்கின்றனள் இவளை நாம் கொன்று தின்பது நன்கல்ல நமது வாசஸ்தானத்திற் கழைத்துக் கொண்டுபோய் இருமனமும் புரிந்து பெருமையாய் வாழ்ந்திருப்போம்,

பூதஞ்சொல் நொண்டிச்சிந்து.

ஆ! ஹா! இவளாரோ—புகலரும்
அந்தரந்தனில்வாழும் சுந்தரியோ
கந்தர்வ மாதுதானோ—இவளைக்
கண்டவுடனென்மனஞ் சோருகிறதே
அருகினிற்சென்று நமது—மனதின்
கருத்தையும்புகன்று இத்தருணமே
நமதுபத்தினியாக—இருப்பதற்கு
நலமிகும்சாமார்த்தியஞ்செய்து
அழைத்துக்கொண்டு செல்வோம்—இதுதான்
அவனியோர்புகலரும் சாமார்த்தியம். (ஆ! ஹா)

ஆண்பூதம்-வசனம்.

பெண்ணே! நீயே யெனது பத்தினி யானே யுன் மணாளனென் றறிவாய் மாதரசே!

லலிதாங்கி-வசனம்.

அடா துஷ்ட பூதமே என்னவார்த்தை பாஷித்தனை? என்னை உன் தாயென மதியாமல் மனையாளென மதிப்பாயாகில் மரணமுற்று அழிந்துபோவாய்.

ஆண்பூதம் லலிதாங்கியை தனது
வாசஸ்தானத்திற்கு எடுத்துக்
கொண்டுபோவது.

18

பெண்பூதம் ப்ராரம்பம்.

ஆ! ஹா! நாயகா! இவளார்? எங்கே யிருந்து அழைத்துக் கொண்டுவந்தீர் யான் பசிதணியப் புசிப்பதற்கு யோசிக்கின்றேன்.

ஆண்பூதம்-வசனம்.

பெண்ணே! யாது வார்த்தை பாஷிக்கலாயினை? யான் உனக்கு ஊழியஞ் செய்துக் கொண்டிருப்பதற்காக அழைத்து வந்தேன். ஆகையால் நீ இந்தப் பெண்ணைக் கொன்று தின்பதற்கு மனதில் நினையாதே.

பெண்பூதம்-வசனம்.

சரி! அப்படியானால் சந்தோஷம் இருக்கட்டும்.

லலிதாங்கி - தரு.

(சித்திரமின்னுக்கண்களாலே) என்றவர்ணமெட்டு.

என்னசெய்வேன் ஏதுசெய்வேன்.
இவ்விதிக்கு சங்கரனே
அன்யாயமாய் பூதத்தினால்
ஆவிபிரிந்திடலானேன். (என்ன)

பார்க்கபயமாகுதினி பார்வதிநாதாவென் துயர்
தீர்த்தருளும்சிவப்ரகாசா சிந்தனைசெய்தேனையுனை (என்ன)

கானகந்தில்வாழ்ந்தாலும் கூருபூதவாய்க்கிரையாய்
ஆனேனேசங்கரனே ஆவிசோருதென்னசெய்வேன் (என்ன)

வசனம்.

சங்கரா சம்போ கைலாசவாசா நான் இவ்விதமாய் பூதத்தின் வாய்க்கிரையாவதற்கோ பாரினிற் பெண்ணாய்ப் பிறந்தேன் இனி நாம்

விசனப் படுவதாற் பிரயோசன மில்லை வருவது வந்தே தீரும் இருப்பதைவிட இறப்பதே மிகவும் நலமாகும்.

ஆண்பூதம்-வசனம்.

பெண்ணே ! என்னைத் திருமணம் புரிந்துக் கொள்வாயாகில்என் மனையாளை உனக்கு ஊழியஞ் செய்துக் கொண்டிருக்கும்படியாய் ஆக்ஞாபிப்பேன் இது உண்மை யென்றறிவாய்.

லலிதாங்கி-வசனம்.

இதுதான் தருணம் ஐயா பூதராஜனே உன்மனையாளைக்கொன்று விடுவீராகில் யான் உன்னைத் திருமணம் புரிவேன்.

ஆண்பூதம்-வசனம்.

சரி ! அவ்விதமே இதோ கொன்று விடுகிறேன்.

ஆண்பூதம் பெண்பூதத்தை
தந்திரமாய் வரவழைத்து
கொன்று விடுவது.

ஆண்பூதம்-வசனம்.

பெண்ணே ! இதோ பார்த்தனையா கொன்று விட்டேன் இனி நமது மனமகிழ திருமணம் புரிந்துக் கொள்வோம்.

லலிதாங்கி-வசனம்.

ஐயா ! பூதராஜனே மிகவும் சந்தோஷம் நீர் இத்தருணமே சென்று மதுராபுரியிலிருக்கும்மனோரஞ்சனியை அழைத்துக்கொண்டு வருவீராகில் யாங்களிருவரும் உம்மைத் திருமணம் புரிந்து மனமகிழ்ந்திருப்போம்.

ஆண்பூதம்-வசனம்.

இதோ அழைத்து வருகிறேன் பிராணநாயகி.

காந்தப் புரம்.

சாந்திபன் கொலு.

சாந்திபன்சொல் - விருத்தம்.

கையில்மான் மழுவுமேந்தி கங்கையை சிரசிற்சூடி
துய்யவெண் ணீறணிந்த சொரூபமே கைலைவாழ்வே
மெய்யனே உமாமயேசா மேன்மைசேர் கருணாநாதா
வையகம் செழிப்புற்றோங்க வரமருள் சிவமேபோற்றி.

மந்திரி - விருத்தம்.

தாரணி யோர்கள்மெச்சும் தரணியா போற்றிபோற்றி
வீரமாய் உலகையாளும் வேந்தனே போற்றிபோற்றி
தீரர்க ளஞ்சத்தக்க திடமிகும் மன்னாபோற்றி
பாரினைப் பரிபாலிக்கும் பராக்ரம அரசேபோற்றி.

மந்திரி - வசனம். அரசே நமஸ்கரிக்கின்றேன்.

அரசன் - வசனம். கல்யாண் !

குடிகள் பிராப்தம்.

குடிகள் - வசனம். சேவகா யாங்கள் வந்திருப்பதாக அரசனுக்குத்தெரிவிப்பீர்.

சேவகன் (வசனம்.) அரசே குடிகள் தம்மைக்காண்பதற்கு வந்திருக்கின்றனர்.

சாந்தீபன் (வசனம்.) வரவழைப்பாய்.

சேவகன் (வசனம்) வருவீர் நகரவாசிகளே.

குடிகள் (வசனம்.) அரசே நமஸ்கரிக்கின்றோம்.

சாந்தீபன் (வசனம்.) நகரவாசிகளே! யாது காரணமாக வருகலாயினீர் தெரிவிப்பீர்.

குடிகள் (வசனம்.) அரசே! வனமிருகங்களதிகரித்து நகரிற் பிரவேசித்து யாங்களிட்ட பயிரையெல்லாம் அழித்துப் போடுகின்றது, அன்றியும் புலி சிறுத்தை முதலின துஷ்டமிருகங்கள் அநேகரைக்கொன்று விட்டன மஹாப்ரபு.

சாந்தீபன் (வசனம்.) நகரவாசிகாள் நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் நான் இதோ கானகத்திற்சென்று மிருகங்களையெல்லாம் அதஞ்செய்து உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்கிறேன் உமதிருப்பிடஞ் செல்வீர்.

குடிகள் (வசனம்.) அப்படியே மஹா பாக்கியம் அரசே.

சாந்தீபன் (வசனம்.) மந்திரி நாம் வேட்டையாடுதற்குக் கானகத்திற் செல்லவேணும் வேடவில்லியர்களை அதி சீக்கிரத்தில்வரவழைப்பாய்.

மந்திரி (வசனம்.) அப்படியே மஹா சந்தோஷம் ப்ரபு.

"வேடவில்லியர் ப்ராப்தம்."

{ சாந்தீபன் வேட்டையாடுதற்குக் கானகமார்க்கமாய் வருதல். }

——(*)——

ஆண்பூதம் வசனம்.

அடடா! இங்ஙனம் யாதோ நரவாடை வீசுகின்றதே அருகிற் சென்று கொன்றுதின்போம் அடா நரமாம்ஸ பக்ஷணமே ஓடாதே நில் நில் பசியாயிருக்கின்றது.

சாந்தீபன் - வசனம்.

அடா பூதமே, இதோ என் அஸ்திரத்தினால் உன்னைக் கொன்று விடுகிறேன் பாரடா துஷ்டா.

பூதம் - வசனம்.

நல்லவார்த்தை பாஷித்தனையே அடா நரனே இதோ பார் உனது சரீரத்தை நெறநெறவென்மென்று என்பசிதணிய தின்றுவிடுகிறேன்.

சாந்தீபன் - தரு.

நாராயணாவருவாய் (யென்ற வர்ணமெட்டு.)

இடசித்தமுடையவென்கை நீக்ஷண்யகணைகளேவி
அடடாவுன் ஆவிதன்னை அந்தகனூர்க்கனுப்புகிறேன்.

பூதம் - தரு.

நல்லவார்த்தை பாஷித்தனை நரமாம்ஸபக்ஷணமே
கொல்லாவிடின் ராஜனே நான் பூதமல்லவேடா.

சாந்தீபன் - தரு.

பார்மீதில்வசிப்பவரை பக்ஷணம்செய்தபூதமே
கூர்முகக்கணைகளேவி கொல்லுகிறேன்பாருந்தனை.

பூதம் - தரு.

தொடுத்திடும் அஸ்திரங்களெல்லாம் ஓடித்தெறிந்தேனீக்ஷணமே
திடரென வுனைப்புசிக்க தீவிரமாய்வந்தேன்பாராய்.

சாந்தீபன் - தரு.

சந்திராஸ்திரம்விடுத்துன் சிரசையறுத்திக்ஷணமே
அந்தகனூர்க்குன்னை அனுப்புகிறேன்பாரடா நீ.

(பூதம் அஸ்திரத்தால் இறப்பது)

சாந்தீபன் - வசனம்.

ஆ! ஹா! இந்தப் பெண்ணைப்பார்த்தால்! கந்தர்வ ஸ்திரீயைப் போலிருக்கின்றதே, சரி! சரி! இந்தக் கன்னியைத் தான் திருமணம் புரிந்து பெருமையாய் வாழ்ந்திருக்கவேண்டும்.

லலிதாங்கி - வசனம்.

ஆ! பரமேஸ்வரா யான் என் செய்வேன் இந்தக் கானகத்தில் யான் பூதத்தின் வாய்க்கி[illegible] வதற்காகவென்னை சிருஷ்டித்தனையோ கர்த்தவ்யமே,

சாந்தீபன் - வசனம்.

பெண்ணே யானுன்மீதுற்ற ஆசையால் மனந் திகைத்து மதிமயக்கமாயினேன் ஆகையால் இத்தருணமே எனது நகரத்தில் வந்து என்னைத் திருமணஞ் செய்துக்கொள்வாய்.

லலிதாங்கி - வசனம.

அரசே ! இவ்விதமாய் பரீஷித்தல் நன்கல்லஎன்மனதிற்கிசைந்த மன்னனைத் திருமணம் புரிவேனே யல்லாமல், மற்றவர்களைமனதில் நினையேன் இது உண்மை யென்றுணர்வீர்.

சாந்தீபன் - வசனம.

அப்படியா ! நல்லது எவ்விதமாயினும் உன்னையானே விவாகஞ் செய்துக் கொள்ளுகிறேன் பார்.

{ சாந்தீபன் - லலிதாங்கியைப் பிடித்துக் கொண்டு தன்தேசத்திற்குப்போவது. }

காந்தப்புரம் - மாளிகை.

சாந்தீபன் - தரு.

என்மனம் (என்றவர்ண மெட்டு.)

கரி யெத்தனை மணம்புரிவ

லலிதாங்

விதமா யென்னிடம்

21

சாந்தீபன் - தரு.

தென்றலும் வீசுதே தேகமுங் கூசுதே

லலிதாங்கி - தரு.

எந்தனை இச்சிப்பது நீதியோ மன்னவா

சாந்தீபன் - தரு. லலிதாங்கி - தரு.

நீ யென்பத்தினி தாய்நானுமக்கு.

சாந்தீபன் - தரு.

அடாதமொழி சொன்னாலுனை அருஞ்சிறை வைப்பேன்

லலிதாங்கி - தரு.

தகாதவார்த்தை பாஷிப்பது தர்மமல்லவே

லலிதாங்கி -வசனம்.

அரசே ! யாதாமொரு கன்னியும் தன் மனதிற் கிசைந்த மணாளனை விரும்புவாரன்றி மற்றவர்களை விரும்பார். ஆகையால், யானும் என் மனதிற்கிசைந்த அழகேசனை மணம்புரிவேனேயன்றி,உம்மை விரும்பேன் இது உண்மை யென்றறிவீர்.

{ சாந்தீபன் கோபங்கொண்டு லலிதாங்கியை கிழவியைப் போலுருமாறியிருக்கச்செய்வது. }

ஆரண்யம்,

திருடர்கள் பிரா॰பதம்.

———(*)———

திருடர் - தரு, மனதினில் (யென்ற வர்ணமெட்டு.)

அண்ணமாரே தம்பிமாரே அந்தாவீரரே-நம்து
அரசன்வீட்டிற்கொள்ளையடிப்போம் அன்பாய்வருவீர்
கருங்கற்சுவராயிருந்தபோதிலும் கையாலிடிப்போம்
கன்னூற்றோரைவெட்டியெறிந்து காட்டுக்குஓடிப்போவோம்
மனதிலொன்றும்கவலையின்றி வருவீர்செல்லுவோம்
நினைத்தபடியேயாதிர்த்தோர்களை பிடித்துக்கொல்லுவோம்.

வசனம்.

ஆ! ஹா! நேசர்களே! இன்றையதினம் அமாவாசையிருட்டாயிருப்பதால் நமது அரசன் வீட்டிற்சென்று நமது மனதிற் கிசைந்தவரையினும் பொன் பொருளனைத்தும் கொள்ளையடிப்போம் வருவீர்.

திருடர்கள் - அரண்மனைக்குச்செல்வது.

திருடர்கள் - வசனம்.

அண்ணமாரே! தம்பிமாரே இதோ யாவரும் நித்திரை செய்கின்றார்வெகு ஜாக்கிரதையாகத்தான் திருடவேண்டும்.

திருடர்கள் - தரு.

நந்தவனத்தின் (என்றமெட்டு.)

ஆ! ஹா யாமென்னென்றுரைப்போம்-இவர்கள்
அணிந்திருக்கும்பொன் ஆபரணம்யாவும் (ஆ)

முத்துமாலையும் மோகனமாலையும்
முழுவயிரமிழைத்த மோதிரங்களும்
நத்துபுலாக்கும் நவரத்னகம்மலும்
நகைசவிலேமதிக்கும் அட்டிகைமுருகும் (ஆ)

வசனம்.

ஆ! ஹா! நேயர்காள் இந்த ஆபரணங்களையெல்லாம் வெகுஜாக்கிரதையாய்த்தான் திருடிக்கொண்டோம் அதோ ஒருகிழவி நித்திரையின்றி விழித்திருக்கின்றனள் பார்த்தீரா.

கால்திருடன் - வசனம்.

அண்ணே அவளை உயிருடன் விடுத்துச் சென்றால் அரசனுக்குச் சொல்லிவிடுவாள்.

அரைத்திருடன் - வசனம்.

ஆனால் இப்போதே வெட்டியெறிந்து கொன்று விட்டுப்போவோம்.

முக்கால்திருடன் - வசனம்.

கிழவியைக் கொல்லாதீர் நம்முடன் அழைத்துச்சென்றால் நமது தாயைப்போல நமக்கு சாதஞ் சமைத்துப் போடுவாள்.

முழுத்திருடன்.

ஆனால் அழைத்துக்கொண்டு வருவீர்.

திருடர்கள் - வசனம்.

கிழவி உன்னைப்பார்த்தால் எமது தாயைப்போற் காணப்படுகின்றது. ஆகையால், எங்களுடன் வருவாயம்மா.

லலிதாங்கி-வசனம்.

ஆ! விதிவசமே இதென்ன ஆச்சர்யம் நமக்கு வருவதெல்லாம் ஆபத்தாயிருக்கின்றனவே.

திருடர்கள் - வசனம்.

கிழவி! நல்லமனதாய் வருகின்றாயில்லையா? இந்தக் கத்தியினால் உன்னை வெட்டிப்போடவா சீக்கிரமாய்ச் சொல்.

லலிதாங்கி - வசனம்.

வருகிறேனையா என்னைக் கொல்லாதீர்.

திருடர்கள் காட்டிற்குபோவது.

திருடர் - வசனம். அம்மணி! யாங்கள் ஸ்நானஞ் செய்துவிட்டு வருகிறோம் சீக்கிரம் சமையல் செய்வாய்.

லலிதாங்கி - வசனம், நல்லதையா!

{ லலிதாங்கி - ஸ்நானஞ்செய்தவுடனே பழைய கன்னிகைரூபத்துடன் வருவதைக்கண்ட திருடர் மனமிரங்குவது. }

திருடர்கள் - வசனம். அப்பா! இதென்ன ஆச்சர்யம் நாம் கிழவியென்றல்லவோ பார்த்தோம், இது யாதோ தேவதையாயிருக்கின்றதே! ஒருவேளை நம்மைக் கொன்றுவிடுமோ.

{ திருடர் - திருடிக்கொண்டுவந்த நவரத்தின ஆபரணங்களை வாழையிலையில் வைத்து படையல் போடுவது. }

திருடர் சொல் நொண்டிச்சிந்து.

அம்மணி மகமாயி—எங்களை
ஆதரித்திடும் சர்வேஸ்வரியே
அறியாதோர் செய்பிழை-மன்னித்து
ஆதரித்து காப்பாற்றும் குலதெய்வமே
கோடி சரணமம்மா—எங்களை
கொல்லாமல் விட்டுவிடு ஓடிப்போறோம்

மைந்தர்கள் செய்தபிழையை—தாயே
மன்னித்து ரக்ஷியும் மயேஸ்வரியே
பாதம் பணிந்தோமம்மா—எங்களை
பாதுகார்த்து ரக்ஷியும் பார்வதியே.

வசனம்.

அம்மணி! யாங்கள் தெரியாமல் உன்னை அழைத்துக்கொண்டு வந்தோம் எங்கள்மீது என்னகுற்ற மிருந்தபோதிலும் மன்னித்துக் காப்பாற்றி இரக்ஷியும் ஜெகதீஸ்வரி.

(திருடர்கள் ஓடிப்போவது.)

லலிதாங்கி - விருத்தம்.

ஊழ்வினையனைத்துமின்று ஒருமிக்கபறந்து போச்சு
தாழ்வினியணுகிடாது சங்கரன் கிருபையாலே
சூழ்புவி பரிபாலிக்கும் சுந்தரனை மணம்புரிந்து
வாழ்ந்திருப்போமெந்நாளும் மாநிலந் தனிலன்பாக.

வசனம்.

ஆ! ஹா! பார்த்தனையா? என்ன ஆச்சர்யம்? திருடர்கள் நம்மைக்கண்டு தேவதையென மனதிரண்டு ஓடிப்போய்விட்டனர். இவையனைத்தும் சங்கரன் கிருபையன்றி மனச்செயலன்று, ஆயினும் நாம், இனி நமது மனதிற்கிசைந்த அழகேசனை விவாகஞ் செய்துகொள்வதற்குத் தகுந்தயோசனை செய்யவேண்டும்.

காங்கேய முனிவர் வருவது.

லலிதாங்கி - தரு.

வாரும் ஜெகதீஸனே-(என்றவர்னமெட்டு.)

பாதம் பணிந்தேனையா-தபோநிதி
பாதம்பணிந்தேனையா. (பா)

பூதலமெங்கும் புகழ்ந்திடுமுன்திரு
பாதம்பணிந்தேனென்னை பாதுகாரும் (பா)

ஞானவடிவே மோனகுருவே
மாநிலத்தோர் துதி மாமுனியே (பா)

எந்தன்மனவருந்த மெல்லாம்பறந்தோட
சிந்தித்தேனுன்பாதம் காருமென்னை (பா)

23

வசனம்,

ஞான சொரூபமாய் பரமேஸ்வரனை மனதிலிடமாகப் பூஜிக்கும் அருந்தவ முனிவரே என் மனக்குறையைத் தீர்த்து காப்பாற்றி இரக்ஷியும் கருணாநிதி.

காங்கேயமுனிவர் வசனம்.

நீ யாரம்மா? நீ வசிப்பது எங்கா? உன்னைப் பார்த்தால்இராஜபத்தினியைப்போல இருக்கின்றதே நீ யாது காரணமாக இங்ஙனம் வந்தனையோ? யான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வாய்.

லலிதாங்கி - தரு.

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

எந்தன்மனவருந்த முன்பாற்சொல்லுவேனையா
சிந்தைமகிழ்ந்து கேட்பீர். (எந்த)

அநுபல்லவி.

சந்திரசேகரன் கிருபையினால்பிறந்தும்
முந்தியஜனனத்தின் ஊழ்வினையால்வாய்ந்த. (எந்த)

சரணங்கள்.

சித்திரக்ஷேத்ரப்பதி அரசன்புத்திரியாக
சீருலகில்ஜனித்து சிறப்புடன்பாரினை
சித்தமகிழ்வே பரிபாலனஞ்செய்தும்
தீவினையாலேயான் இக்கதிபாவியானேன். (எந்த)

அளகாபுரியில்வந்து அரசனைக்கண்டுற்று
அழகேசாவெந்தனை மணம்புரிவீரென்றேன்
களங்கமின்றியென்னைக் கலியாணம்புரியாமல்
கால்கைக்குவிலங்கிட்டு காட்டில்விடுத்திட்டார். (எந்த)

அந்நாளிலென்மனம் ஆற்றொணாதுயருற்று
அருங்கானகந்தன்னில் அழுதுகொண்டிருக்கையில்
அந்தமாயோர்பூதன் அன்பாயெடுத்துச்சென்று
அவனுக்குமனைவியாய் இருக்கச்சொன்னானையா. (எந்த)

தகாதவார்த்தைசொன்னால் சாவாய்பூதமேயென்று
தடுத்திட்டேன்சாந்தீபன் தனுசினால்பூதமும்
அகாலமரணமுற்று ஆவியொழிந்தனன்
அப்பால்சாந்தீபனென்னை அழைத்துச்சென்றானையா. (எந்த)

திருடரால்யானிங்கு வந்தேனிதருணமுன்
திருவடியைப்பணிந்து தெரிசித்தேனையனே
பெருமையுடனே அழகேசனைமணந்துயான்
தாரணியில்வாழ்ந்திட கிருபைபுரிவீரையா. (எந்த)

வசனம்.

ஐயா! அருந்தவமுனிவரே! யான் சித்திரகூடத்திரப் பதியின் இராஜபுத்திரி. காலவித்தியாசத்தினால் என் தாய் தந்தையர் இறந்து விட்டபடியால், யான் அளகாபுரியில்வந்து அழகேசனைத் திருமணம் புரிந்துக் கொள்வீரென வேண்டினேன், அவர் என் கால்கைகளுக்கு விலங்கிட்டு கானகத்தில் விடுத்தனர். அத்தருணம் ஓர் ஆண்பூதம் என்னை எடுத்துக்கொண்டு தன் வாசஸ்தானத்திற்குச் சென்றது. அத்தருணம் பெண்பூதம் என்னைத் தின்பதற்கு வருக அதனைக் கொன்று விட்டு, சார்ந்தபன் அஸ்திரத்தினால் இறந்தது. அந்த சார்ந்தபன் என்னை அழைத்துச்சென்று தன்னை மணம்புரிவாயெனக். யான் தடுத்ததினால் என்னைக் கிழவியைப்போ லுருமாறச்செய்தனன். அத்தருணம் இருடரென்னை இவ்வனம் கொண்டுவந்து விடுத்துப்போயினர். ஆகையால் அருந்தவமுனிவரே தமது கிருபையால், அந்த அழகேசனை யான் திருமணம்புரிந்து பெருமையாய் வாழ்ந்திருக்கும்படி கிருபைபுரிவீர்.

காங்கேயமுனிவர் - வசனம்.

அம்மணி! நீ சொன்றவை யனைத்தும் கவனித்துணர்ந்தேன் ஆயினும் அந்த அழகேசனோ சுத்த துஷ்டனான வைராக்கிய சீலனாகுதே அவன் உன்னைத் திருமணம் புரிந்துக் கொள்வானென்றால் கேட்போர் ஆச்சரியமெய்துந் தன்மையன்றோ? ஆனால் நீ என்னைப்பணிந்து உன் மனக்குறையைப் புகன்றமையால் யான் எவ்வித தந்திரத்தினாலாவது அழகேசனை உனக்குரிய மணாளனாக விரைவாக செய்கின்றேன். ஆகையினால், யான் உனக்கு பரதநாட்டியங் கற்பித்து யானோ நட்டுவனாக அரசன் முன் உன்னை அழைத்துச் செல்கிறேன் வருவாயம்மா.

லலிதாங்கி (வசனம்.) அப்படியே மஹாபாக்கியம் தபோநிதி,

காங்கேயமுனிவர் நட்டுவனைப்போல வேடந்
தரித்து லலிதாங்கிக்கு பரதநாட்டியங்
கற்பித்து அளகாபுரியின் அரண்
மனையில் அழைத்துக்கொண்டு
வருவது.

அழகேசன் - தர்பார்.

நட்டுவன் (வசனம்.) சேவகா பரதநாட்டியர் வந்திருக்கின்றோமென்று உமது அரசனுக்குத் தெரிவிப்பாய்.

சேவகன் (வசனம்.) அரசே! யாவரோ பரதநாட்டியர் வந்திருக்கின்றனர் ப்ரபு.

24

அழகேசன் (வசனம்.) சரி! வரச்சொல்வாய் சற்றுநேரம் நடனம் புரியச்சொல்லி மனோல்லாசமாய் வேடிக்கை பார்ப்போம்.

சேவகன் (வசனம்.) வருவீர்கள்

நட்டுவன் (வசனம்.) மஹாப்ரபு வந்தனம்புரிகின்றேன்.

அழகேசன் (வசனம்.) கல்யாண் நீங்கள் யார் யாதுகாரணமாக இங்ஙனம் வந்தீர்.

நட்டுவன் (வசனம்.) அரசே யாங்கள் வெகுதூரத்தி லிருந்து வந்தோம். இந்தப்பெண் பரதநாட்டியத்திற் கீர்த்திப்பிரகாசமாய் யாவராலும் புகழ்ந்துரைக்கும்படியாய் நடனம்புரிவள். மஹாராஜா சமூகம் வந்தால் யாதேனும் பொன்பொருள் தருவீரென உமது சமூகத்தை நாடிவந்தோம் மஹாப்ரபு.

அழகேசன் (வசனம்.) மஹா சந்தோஷம் எதோ சற்றுநேரம் இந்தச் சபையிலுள்ளோர் மனமகிழ நடனம் புரியச்சொல்வாய்.

நட்டுவன் (வசனம்.) அப்படியே மஹாபாக்கியம் அரசே! அம்மணி நீ கற்றுணர்ந்த பரத சாஸ்திர விதிப்படி நாட்டியம் புரிவாயம்மா.

லலிதாங்கி (வசனம்.) அப்படியே மஹாசந்தோஷம்.

லலிதாங்கி - தரு.

இகயாலனே-(என்றவர்ணமெட்டு.)

சுகுமாரனேஎன்மனம்
சேருநேசன் ஆசையால் — சுகு
மாநிலத்தோர் புகழரசே
மணம்புரிவீரித்தகி — சுகு

கமலமுகவடிவழகா
காரும்ஆசை தீருமே — சரு
திங்களுந்தான்வெப்பமதாய்
தேகந்தனைபுலர்த்துதே — சரு
தென்றலியோ வீசுதிரி
தேன்மொழிச்சகியேனே — சரு.

அழகேசன் (வசனம்.) ஆ! ஹா! மந்திரி இந்தப் பெண் சற்று நேரம் இங்ஙனம் நடனம்புரியும்போதே என்மனம் ஓர்விதமயக்கமாய் மனோற்சாகத்தை தக்கொடுக்கின்றதே சதாகாலமும்என்னிடமிருந்தால் எவ்வளவு சுகானந்தமாயிருக்கும். ஆ! ஹா! என்ன அழகு? என்ன சிங்காரம்? ஸ்திரீகளை இவ்விதமும்பிரமன்சிருஷ்டித்திருக்கின்றனரோ?

மந்திரி (வசனம்.) அரசே உலகிற ஜனித்தமாந்தர் கட்கு சுகானந்தமெய்வதமெனின் சதிபதியும்மனோல்லாசமாய் வாழ்வதுதான். ஆகையினால் பரமேஸ்வரன் பார்வதியை இடபாகத்திற்றரித்தும், கங்கையைச் சிரசிலணிந்தும், மகாவிஷ்ணு லட்சுமியை மார்பிலணிந்தும் பிரமன்சரஸ்வதியை நாவில் தரித்தும் அநேக மகான்களாகிய அந்தப் முனிவரும் தமது பத்தினிகளுடன் மனோல்லாசமாய் வாழ்கின்றனர். ஆகையால் நீர் ஓர் கன்னிகையைத் திருமணம் புரிந்துக்கொள்வீராகில் மிகவும் நலமாயிருக்கும் ப்ரபு.

அழகேசன் (வசனம்.) மந்திரி! இந்தப்பெண்ணை எனக்குரிய பத்தினியாயிருப்பதற்குத் தகுந்த முயற்சி செய்வாய்.

மந்திரி (வசனம்.) அரசே! அதற்காக நீர் ஆலோசிக்க வேண்டாம். அந்த நட்டுவனை விசாரித்து சரிப்படுத்திக் கொள்வீர்.

அழகேசன் (வசனம்.) ஐயா! அந்த நாட்டியப் பெண்ணுக்கு வேண்டிய பொன்பொருள் தருகின்றேன் என்னுடன் தனிமையாக வார்த்தையாடும்படி கிருபைபுரிவீர்.

நட்டுவன் (வசனம்.) அப்படியே மகாசந்தோஷம், அம்மணி அரசனுடைய கணையாழி மோதிரத்தைத் தங்கமாய் வாங்கிக்கொண்டாயாகில் உன்மனதின்படியே சம்மதிப்பாள்.

லலிதாங்கி (வசனம்.) அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

லலிதாங்கி - தரு.

மன்னின்சுவைமயாற்ற-(யென்றவர்ணமெட்டு.)

இணையொருவரில்லாமலே — இராஜரீகம்புரியும்மன்னா
கணையாழிமோதிரத்தைக் — களிப்புடனெனக்குத்தாரும்

வசனம்.

இராஜாதிராஜர்கள் பூஜிதம் பெறும் மஹாப்ரபு உனது கணையாழி மோதிரத்தை எனக்குத் தருவீர்.

அழகேசன் - தரு.

அன்னநடைசுந்தரியே — அழகானஉன்வாய்திறந்து
மன்னவென்றுசொன்னபோதே — மயக்கமாகுதே கண்ணது

வசனம்.

பெண்ணே முல்லையரும்பென்னத் துலங்கும் பல்வரிசை பளபளவென பிரகாசிக்க. உனது அழகான வாயினால் மன்னா கணையாழிமோதிரந் தாருமென்று சொன்னவுடனே என்மனம் ஓர்விதமாய்த் திகைத்து மயக்கமாகுதே ஆகையால் இதோ நீ விரும்பிய மோதிரம் வாங்கிக்கொள்வாய் மாதே.

லலிதாங்கி - தரு.

உன்னழகும்என்னழகும் — உத்தமனே இவ்வாறனது
பன்னுவிமரந்தனைக்கு — பசுமுன்னாமின்னநாதா

வசனம்.

எனது அன்பிற்கிசைந்த பிராணேஸா உமது அழகானந்த தேஜஸமைந்த முகவஞ்சகரமும் எனது சிங்கார தேஜஸமைந்த திருவுருவமும் ஒற்றுமையாயிருக்கின்றதா?

அழகேசன் - தரு.

ஆசைநேசமனோல்லாச — அழகிலகுசுந்தரியே
பாசமுடன்மணம்புரிந்து — பார்தனிலேவாழ்ந்திருப்போம்.

வசனம்.

எனது மனதிற்கிசைந்த மனோல்லாச சுகானந்த மின்னற்கொடியெனும் மாதரசே நாமிருவரும் திருமணம்புரிந்து தரணியில் வாழ்ந்திருப்பதற்கு யான் மிகவும் ஆசையுற்றவனாயிருக்கின்றேன்.

லலிதாங்கி (வசனம்.) மெத்த சந்தோஷம் பிராணேஸா, நாமிருவரும் சந்ததமும் பிரியாதிருப்பதற்கு அடையாளமாக உமது பெயரை எனது கரத்திலும் எனதுபெயரை உமது கரத்திலும் பதிந்துக்கொள்வோம்.

அழகேசன் (வசனம்.) அப்படியே! மஹாசந்தோஷம் மாதுசிரோன்மணி:—மந்திரி இத்தருணம் பச்சைக்குத்தும் குறத்தியை அழைத்துக் கொண்டுவருவீர்.

மந்திரி (வசனம்.) அப்படியே மஹாபாக்கியம் அரசே,

குறத்தி - ப்ராப்தம்.

குறத்தி (வசனம்.) அரசே நமஸ்கரிக்கிறேன்.

அழகேசன் (வசனம்.) கல்யாண மாதே எங்களிருவருக்கும் பச்சைக்குத்துவாய்.

குறத்தி (வசனம.) அப்படியே மஹாபாக்கியம் ப்ரபு.

{ அழகேசன் தனது பெயரை
லலிதாங்கியின் கரத்தில்
எழுதுவ்து. }

குறத்தி - தரு.

முருகாவரந்தருவாய்-(என்றவர்ணமெட்டு.)

பச்சைகுத்துகிறேன் மனோல்லாசமாய் (பச்)
இச்செகத்தினர்போற்றும் இராஜராஜேஸ்வரன்
பக்ஷமுள்ள ராஜேஸ்வரியே அம்மா (பச்)
தேவாதி தேவர்கள் தெயமென்றாசீர்வதிக்க
பூவுலகத்தினர்புகழும் அம்மா (பச்)
சிங்கார லங்கார தேஜஸமைந்திடும்
மங்கள ராகாந்தசொரூபீ அம்மா. (பச்)
திக்கட்பிரகாச திருவுருவேயுந்தன்
செங்கரந்தனக்கழகாக அம்மா (பச்)
சுந்தரஜெயவீர சூரதீரதவிராஜ
சுந்தரம்பகத்தைதபாடி அம்மா (பச்)

லலிதாங்கி (வசனம்.) பிராணேசா! யானெனது பெயரைஉமது கரத்தில் எழுதுகிறேன்.

அழகேசன் (வசனம்.) அப்படியே மஹாசந்தோஷம் எனது ஆசைநேச விஸ்வாச மிருந்த அமிர்தவாசகி.

{ லலிதாங்கி - தனதுபெயரை
அழகேசன்கரத்திலெழுதுவது. }

அழகேசன் - தரு.

ஆனைமந்தரே-(என்றவர்ணமெட்டு.)

ஆ! ஆர்சரியம் அவனியில்வாழ்
அறிஞர்களும்வியப்புறுரோ கேள்வியுற்றால்

பூதலம் புகழ் ப்ரகாசியே
புத்தியிற் சிறந்தேசியே
மாதேயுந்தன் சமர்த்தையெவரால்
மதிக்கலாகும் மாநிலத்தில் (ஆ)

கானுந்தன்கால் கைகளுக்கன்றாள்
நலமுடன்விலங்குபூட்டியே
கானகத்தில் விடுத்திட்டேனே
கன்னியேயெவ்விதமாய்வந்தாய் (ஆ)

வசனம்.

ஆ! லலிதாங்கி உன்னைப்போற் புத்திசாதுர்ய மாதரசியை இந்த பூதலத்திற் சிருஷ்டித்த பிர்மதேவன் சமர்த்தையா னென்னவென்று சொல்வேன் ஆ! ஹா என்ன ஆச்சர்யம்? பெண்ணே அந்நாளில் உன் கால்கைகளுக்கு விலங்குபூட்டி ஆரண்யத்தில் விடுத்தேனே நீ எவ்விதமாய் இங்ஙனம் வந்தனையோ? யான் கவனித்துணர விபரமாய்ப் புகல்வாய்,

லலிதாங்கி சொல்வது.

நொண்டிச்சிந்து.

கமலமுகவதனா—எந்தன்
கஷ்டவிஷ்திரத்தைச் சொல்லுகின்றேன்
அன்புடனே கேட்பீர்—எந்தன்
அன்னை தந்தைய ரிறந்தபின்பு
சிம்மாசனத்தமர்ந்து—சித்ர
க்ஷேத்திரப்பதியை யாண்டிருந்தேன்
தாதியையருக்கழைத்து—எனக்குத்
தகுந்தமணாளனை சொல்லென்றேன்
அளகாபுரிமன்னன்—அவருன்
அழகினுக்கேற்ற மணாளனென்றுன்
திருவுருபமெழுதி—கொடுத்து
சீக்கிரமாயும்மை அழைப்பாயென்றேன்
அன்னவளும்மைக்காண—நீர்
அகட்டித்தாக்கியதால் ஓடிவந்து
நிகழ்ந்தசங்கதியுரைக்க—யானே
நின்சமுகம்வந்துகேட்க சம்மதியாமல்
கால்கைக்குவிலங்கிட்டு—என்னைக்
கானகத்திவிடுக்க பூதமொன்று
என்தனையெடுத்துச்சென்று—தனது
சொந்தமனையாளையும் கொன்றுவிட்டு

எந்தனைஇச்சித்ததால்—யான்
தந்திரமாய்கானகத்தில் துரத்திவிட்டேன்
சாந்தீபனென்னும்மகிபன்—வேட்டையாட
சமர்த்துடன்காட்டில்வந்து பூதத்தை
கொன்றுவிட்டென்னைப்பார்த்து—கர்தா
தன்னுடன் அரண்மனைக் கழைத்தார்சென்று
திருமணம்புரிவோமென்றான்—யான்
பிரியமில்லையென்று மொழிந்ததனால்
கிழவிபோலிருக்கச்செய்தான்—அந்நாள்
கள்வர்களங்கனம் வந்துஎன்னை
தமதுதாய்போலெண்ணி—என்னை
சமயல்செய்துபோடுதற்கு அழைத்துச்சென்றார்
அவர்களுடன்சென்று—யான்
ஆரண்யத்தின் நதியினில் ஸ்நானஞ்செய்தேன்
கன்னிகைரூபமமைந்து—மிக
காந்திப்ரகாசமாய் விளங்கக்கண்டு
திருடர்மனமிரண்டு—என்னை
தேவதையென்றெண்ணி ஸ்துதிபுரிந்து
திருடிக்கொண்டுவந்த—பொன்பொருள்
பெருமையாய்வாழையிலை தனில்வைத்து
படையலிட்டுபூஜைபோட்டு—அவர்கள்
பக்தியுடன்பூசித்து ஓடிவிட்டார்
அத்தருணம் யான்மகிழ்ந்து—இந்த
அருந்தபமுனிவரைக் கண்டுபணிந்து
என்கருத்தைப்புகன்றேன்—இவர்
நன்னயமாய்நாட்டியங்கற்பித்து
உன்சமுகம் அழைத்துவந்தார்—இதுதான்
உற்றசெதியாகும் பிராணேசா (க...)

வசனம்.

பிராணேசா யான் இவ்வளவு கஷ்டமிருந்தோர்த்துடன் ஆரண்ய மார்க்கமாய் வருகையில், அருந்தபமுனிவராகிய இந்தகாங்கேய முனிவரைக்கண்டு என்மனக் குறையனைத்தும் புகன்றேன் இம்மஹான்கிருபைபுரிந்து எனக்கு பரதநாட்டியங் கற்பித்து இங்ஙனம் அழைத்து வந்தார் இதுதான் நிகழ்ந்த சங்கதி யென்றுணர்வீர்.

27

அழகேசன் (வசனம்.) சுவாமி! அருந்தவத்திற் சிறந்த பெருமை வாய்ந்த காங்கேய முனிவரே தேவரீர் என்மீது இரக்கமுடைய கிருபைகூர்ந்து லலிதாங்கிக்குப் பரதநாட்டியங் கற்பித்து, என்சமுகம் அழைத்துவந்து சுபமணம்புரியச்செய்து, என்மனதை இல்லற மார்க்கத்திற் பிரவேசிக்கச்செய்த கருணாநிதி! இனி எங்களிருவருக்கும் திருமணவைபவம் மனமகிழ நடாத்துவீர் தபோநிதி.

காங்கேயமுனிவர் (வசனம்.) அப்படியே யாகுக சந்தோஷம் இராஜேஸ்வரா.

அழகேசனுக்கும் - லலிதாங்கிக்கும்.
திருமணவைபவம்.



லலிதாங்கி சொல்வது.
விருத்தம்.

அன்னைதந்தையரைப்போல அன்புடனெந்தனுக்கு
பன்னரும்நடனவித்தை பக்ஷமாய்கற்பித்தென்னை
மன்னனும் அழகேசர்க்கு மணஞ்செய்துதந்தீர்வாழ்வே
இன்புடனுந்தன்பாதம் எந்நாளும்பணிந்தேன்போற்றி

காங்கேயமுனிவர் விருத்தம்.

ஜகத்தினில் கீர்த்திபெற்ற சந்திரவதனியென்னு
[illegible]
பக்தியுடன் அழகேசர்க்கு [illegible]
மகிழ்லலிதாங்கியுந்தன் மனையாளாய்மேவுமாதே

வசனம்.

அம்மணி! கந்தர்வஸ்திரீகளிலும் சிறந்த முகவதிகர தேஜலை யமைந்த நற்குணவதி உன் கற்புநிலை தவறாமல் மணாளனுடன் மகோ லாசமாய் வாழ்ந்துக்கொண்டிருப்பாயம்மா யான்சென்றுவருகிறேன்

வாழி - தரு.

வேணும்வேணுமேகிருபை (யென்றவர்ணமெட்டு.)

சிரிலகும்ககனத்தில்வாழ் தேவர்கள்வாழ்க
யாரிலகும்பரமசிவ பக்தர்கள்வாழ்க. (சிரில)
கற்றுணர்ந்தனாளுணர்ந்த கவிஞர்கள்வாழ்க
நற்குணர்பூதலத்தில் கணவனுடன்வாழ்க. (சிரில)
லலிதாங்கிஅழகேசனும் மகிழுடன்வாழ்க
பலகலைபுணர்ந்தோர்களும் பாரினில்வாழ்க. (சிரில)
தையநாயகியம்மன் சகாயத்தினாலே
வையமிசைசத்தமுனி அச்சாமிவாழ்கவே. (சிரில)
அன்பன் நாயகியும் அவனியில்வாழ்க
இன்பன்துரைசாமி கிருஷ்ணசாமிவாழ்கவே. (சிரில)
கந்தரஜெயவீரகுர நிரகரிாக
கந்தசாமிபிள்ளையன்பர் உலகில்வாழ்கவே. (சிரில)

மங்களம் - தரு.

சமராதபுரிவினகமோ (என்றவர்ணமெட்டு.)

மங்களம்சுப மங்களம் தேவ-தேவ-தேவ
சங்கரசிவ ஞானபோதசாமிவாசமே
இங்கப்பரகார சிவசோமங்களம். (மங்க)
சத்தியுமைபாலனே வேலா-வேலா-வேலா
முத்திகட்கொரு வித்தாகிய வாதாரனே
சித்தர்போற்றும் சிவசுப்பிரமண்யா. (மங்க)
தந்திமுகானந்தனே தேவா-தேவா-தேவா
கந்தரஜெயவீரகுரா நிரகரிாக
கந்தசாமிக் கருள்தயாநிதி. (மங்க)

சுபம்-சுபம்-சுபம்.

பதிவிரதைவென்றலிதாங்கி சரித்திரம்.

சம்பூரணம்.

—(*)—

28/5

கைலாசநாதர்சதகம்	0	2	0
அறப்பளீசுரசதகம்	0	2	0
குமரேசசதகம்	0	2	0
திருவேங்கடமாலை	0	2	0
வடவேங்கடநாராயணசதகம்	0	2	0
அருணகிரியந்தாதி உரை	0	2	0
தண்டலையார்சதகம்	0	1	6
அபிராமியந்தாதி	0	1	6
பார்த்தசாரதிமாலை	0	1	0
சிவநாமாவளி	0	1	0
பட்டணத்தார்பாடல்	0	1	0
திருவொற்றியூர் தியாகராசர் ஸ்தோத்திரமாலை	0	2	0

இப்படிக்கு,

மு. நாதமுனி முதலியார்.